KALANILAYAM.

தனிப்பிரதி ரூ. 0 3 0

# கலா நிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளி வரும்.

வருஷ சந்தா
உள் நாடு ரூ. 7 8 0
புற நாடு ரூ. 9 0 0

காரியாலயம்:—
No. 11, வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

Vol 2.] 1929 ஞு ஏப்ரல் மீ 18உ [No. 16.

OFFICE OF THE ... MADRAS ... 1929

பொருளடக்கம்.


1. தலையங்கம் (Leader) 301
2. ஏமாங்கதத் திளவரசன் (A Novel)
T. N. சேஷாசலம் B.A., B.L. 303
3. அப்பர்
E.N. தணிகாசலமுதலியார் B.A., B. L. 304
4. சிலப்பதிகாரமும் மணிமேகலையும்
A. ஸ்ரீநிவாஸராகவன் B.A. (Hons) 306
5. மாறன் பாப் பாவினம் K. (நாராயணசாமி ரெட்டிகாரு அனுப்பிய பிரதி) 308
6. குலசேகரர்
T. P. மீனாக்ஷிசுந்தரன் M.A., B.L. 310
7. தமிழ்ப் பாடம் 312
8. கம்பராமாயணம்
T. N. சேஷாசலம் B. A, B. L. 314
9. மலர்வனம் "மதுகரம்" 316
10. வர்த்தமானம் 319


சந்தாதாரராய்ச் சேர விரும்புவோர் எந்தத் தேதியிலிருந்து சேரலாமானாலும் கட்டுரைகள் பல தொடர்ச்சியாய் வருவதால் முன்னிதழ்களையும் பெற்றுக்கொள்வது நலம். வி. பி யில் அனுப்பச் சொல்வதைக் காட்டிலும், தொகையை மணியார்டர் செய்வதால் செலவு குறையும். ஸிங்கப்பூர் பினங்கு தென்னாப்பிரிக்கா முதலிய புறநாடுகளுக்கு வி. பி.யில் அனுப்ப இயலாது. மானேஜர்.

## கலா நிலயம்

### வள்ளுவர் வாய்மை.

### III

18905

மாதர்களை இழிவாகக் கூறுகின்றார் என்ற பழியொன்றும் வள்ளுவரைச் சார்ந்துளதென்று எமது நண்பரொருவரோடு உரையாடுங்காலையில் அறியலாயினேம். அந்நண்பர் நன்கு கற்றவர். திருவள்ளுவர்பால் தேர்ந்த பக்தியும் உடையவர். அன்னார், "இனம்போன் றினமல்லார் கேண்மை, மகளிர் மனம் போல வேறுபடும்," என்னுங்குறளை எடுத்துக்காட்டி, "இன்னவாறு மாதரை மாறுபடு மனத்தினர் எனப் பழித்தலும் மேன்மையோ" என அயிர்த்தனர். யோசிக்குமளவில் எற்றுக்கு வள்ளுவர் இவ்வுவமை உரைத்தாரென நோதல் இயல்பே. மற்று, எற்றுக் குரைத்தாரென இயம்புதலும் அரிது. உத்தமிகளுள் உத்தமியாய் உலகத்தில் துதித்துவரும் ஐவர்களில் ஒருத்தியாய துரௌபதிக்கு நாயகனாயிருந்தும் உதிட்டிரன், 'கிம் குரூரம்' என்ற வினவிய யக்ஷனுக்கு "அங்கனா ஹிருதயம் குரூரம்" என்று உத்தரம் உரைத்தது போன்றே, பத்தினித்தெய்வம் எனத்தக்க வாசுகியம்மையாரின் கணவன் இது பகர்ந்ததும், அமைதி காணுமுன் ஆச்சரியமே மேலெழும்படி செய்கின்றது. ஆயினும் நமது சகோதரிகளுக்காக நாம் இக்குறளை நினைத்து நாணவேண்டிய அவசியமில்லை யென்றே எண்ணுகின்றோம்.

எதுபற்றி நாணல்வேண்டும்? மனம் வேறுபடுகின்ற மகளிர் இவ்வுலகின்கண் இல்லரோ! எண்ணிறந்தோர் இருக்கின்றனரென்பதை யாவரும் மறவார், மறுக்கவும் மாட்டார். மற்றுப் புருடர்மனம் வேறுபடுவதில்லையோ எனின், இதனையும் ஒருவரும் மறுக்கமாட்டார். மனமென்பது,மிகுந்த பயிற்சியினால் தேர்ந்திலாதோர்மாட்டு நிலையொன்றுபற்றி நிற்காமல் மாறி மாறி விவகரிக்கின்ற செய்தி உலகப் பரசித்தம். "மகளிர்மனம்போல வேறுபடும்" என்று கூறியதனாலேயே, மனம் வேறுபடாத மகளிரே இலரென்றேனும், ஆடவர்மனம் வேறுபடவே படாதென்றும் திருவள்ளுவர் கருதினாரெனக் கொள்ள இடமில்லை. இவ்வாறு கருதி அவர் ஆண் என்னும் இனத்திற்கே ஓர் உயர்வையும் பெண் என்னும் இனத்திற்கு நிரந்தரமான ஒரு தாழ்வையுங் கற்பித்தார் என மதித்தல் அவருக்கும் நல்லதன்று, நமக்கும் நல்லதன்று, உலகிற்கும் நல்லதன்று.

நாயனார் குறள்களை நண்ணுங்கால் நாம் இரண்டு முக்கியமான விடயங்களை அயர்தலின்றிக் காத்திடோமாயின் பெரிதும் வஞ்சிக்கப்படுவோம். எக்குறளையும் தனியாகப் பிரித்துவைத்துக்கொண்டு இதன்பொருள் இன்னதே என்னத் தேர்தல் நேரிதன்று. "பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னுந் திண்மை

யுண்டாகப்பெறின்'' என்றதும் நாயனார் பகர்ந்த திருவாக்கே. இக்குறட்கு மணக்குடவர், "பெண் பிறப்புப்போல மேம்பட்டன யாவையுள? கற்பாகிய திண்மை யுண்டாகப்பெறின்'' எனச் செவ்விதின் உரைகண்டுளர். எனின், இப்பொய்யாமொழிப் புலவர், மனத்திட்பம்வாய்ந்த மாதரை, அஃதேதன்மை பொருந்திய புருடரைக்காட்டிலும் பலபடி உயர்த்திப் பாராட்டுகின்றார் என்பது புலப்படுகின்றது. அதுவுமன்றி, மனம் வேறுபடாத தன்மைதான் திண்மை எனப்படுவதாகு மாதலால் அத்திண்மைக்குப் பெண்டிரும் உரியவர் என்பதை அவர் மறுத்திலர் என, இக்குறளால் கொள்ளல் வேண்டும். ஆதலின், மகளிர் மனம்போல வேறுபடும் என்னுங்கால் அப்புகலரும் புலமையார், பெண்பாலார் அனைவரையும் அம்மகளிர் என்ற சொல்லினுளடக்கி அவ்வினத்திற்கே உரிய தன்மையில் உவமையாக்கினர் என மதித்தல் ஒண்ணாது. திண்மையற்ற மாதர்களின் மனத்தையே நினைவிற்கொண்டு அவ்வாறவர்பேசினரென்பது பொருத்தமுடைத்து. "திண்மையற்ற மனமுடைய ஆடவர்களும் இருக்கின்றனர்; ஆயின் "மாந்தர் மனம்போல வேறுபடும்'' என்று அவர் ஏன் இயம்பியிருத்தலாகாது என்ற கேள்வி முன்னிங்கு உரைத்தவைகளினின்று எழவேண்டியது ஏற்புடையதே. 'மாந்தர்' எனின் வெண்டளை பிறழும் என்ற காரணத்தினாலேயே மகளிரென விரைந்தமைத்துவிடுகின்ற புலவர்கள் இனத்தைச்சேர்ந்தவர் திருவள்ளுவரல்லர். தளைக்கியைந்த பதந்தேர்தல் அவர்க் கருமையன்று. எனின், பொது நீக்கி மகளிர் என்றவர் உரைத்ததன் கருத்து யாதோ? இதனை ஆராயுங்காலையிற்றான் முன்குறித்த இரண்டனுள் மற்றைய விடயம் முக்கியமாகின்றது.

திருவள்ளுவரனைய மாபெரும் புலமையோர் உள்ளக் கருத்தின் உண்மையனைத்தும் எல்லார் அறிவிற்கும் எட்டித்தான்தீரவேண்டும் என்ற நியதி எங்குமேயில்லை. அவரவர் கல்விக்கும் கேள்விக்கும் அனுபவத்திற்கும் மதியின் நுட்பத்திற்கும் ஏற்றவாறு வள்ளுவர் விளம்பிய வாய்மையைக் காணக்கூடியவராவர். அவருடைய குறள்களிலமைந்த வாய்மைகளின் தன்மையையும் அளவையும் வழுவின்றி உணர்வதற்கு நாமும், அவர் திறமல்லாமற் போனாலும், கல்வியும் அறிவும் பெரிது உடையவராதல் இன்றியமையாததொன்றாம். நம்மனோர் கற்றுள கல்வியும் பெற்றுள அறிவும் ஆங்காங்கு ஒவ்வோர் குறளின் உறுதியை உணர்வதற்கு ஏற்றனவாயிருக்கலாமேயன்றி, எல்லாக் குறள்களின் பொருள்யாவற்றையும் தெற்றென உணர்தற்கொத்த மூதறிவு முழுதும் படைத்தவராகோம். ஒரு குறளின் பொருளை முற்றும் உணர்ந்துவிட்டோம் என்று நேற்று எண்ணியிருக்க, இன்றைக்கு அதன்பால் இன்னுஞ்சில உண்மைகள் காணலாவது யாவருக்கும் நிகழ்ந்திருக்கக்கூடிய அனுபவமே. இதுவுமன்றி இத்தகைய புலவர்கள் அறிவினால் ஆய்ந்து பெறுவதோடு சில அவர்தம் தூய உணர்வினாலும் காண்கின்றனர். அவரனைய சீலமும் சிறப்பும் வாய்ந்தவர்க்கே அவ்வுணர்வால் கண்ட பொருள்களின் உண்மை விளங்கும். "ஈன்றபொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச் சான்றோனெனக் கேட்ட தாய்'' என்றார் வள்ளுவர். இதனால் தந்தைக்கு உவகை பிறக்காதெனக் கொள்ளலாகுமோ. தன் மகனைப் பலர் சான்றோன் எனப் பாராட்டுவதுகேட்ட தந்தை அவ்வியத்தால் அழுங்கிநிற்பான் என்று நினைத்துத் திருவள்ளுவர் தாயையே செப்பினார் என்று எண்ணுவார் இலர். எனின், புருடர்களே, தம்மகன் புகழைக்கண்டும் பொறாமை கொள்ளுதற்கொத்த பொல்லாதவர்களென நாயனார் பழிசுமத்தினார் என்றல்லவோ வருந்துதல் வேண்டும். மற்று, 'மகனை' என்பானேன்! மகளைச் சான்றவளெனக்கேட்ட தாயேனும் தந்தையேனும் உவகை கொள்ளாரோ! அல்லது, மகள் ஒருபோதும் சான்றவள் எனச் சொல்லப்படுவதற்கு ஒத்தவளாவதே இயலாதென்பது வள்ளுவர் கருத்தா! தாய் தந்தையர் இருவர்க்கும் மகன் மகள் இருவரும் சான்றவரெனப்படுவது உவகை விளைவிப்பதற்குக் காரண மாதல்வேண்டும் என மதிக்கின்ற நாம், ஈன்றவரிருவரில் தந்தையையும் மக்களிருவரில் மகளையும் விலக்கியதேனென உணரவல்லோமாயின், "பெண்ணிற் பெருந்தக்க யாவுள'' எனப்பாடிய வள்ளுவர், பின் "மகளிர் மனம்போல வேறுபடும்'' என்று உரைத்ததன் உள்ளக்கருத்தை ஒருகால் உணர்தற்கியன்றவ ராகலாம்.

விருப்பும் வெறுப்பும் அற்ற மனத்தோடும் உணர்வோடும் ஒரு விடயத்தின் உண்மைநிலையை உற்றுநோக்கி உணர்பவர் வள்ளுவரனைய தெய்வத்தன்மையுடைய மேலோர். அன்னார் பெண்களைத் தாழ்த்திவைக்கவேண்டும் என்ற கொள்கையால் இது செப்பினார் என்று எவரும் கனவிலும் நினையார் எனவே நம்புகின்றோம். ஆடவர்மனம் பெண்டிர்மனம் இரண்டிற்கும் வேறுபடுகின்ற இயற்கை யிருக்க, அவ்வேறுபாடு அடைகின்ற விரைவிலேனும் அளவிலேனும் மகளிர் மனம் மிகுந்திருந்ததென்று வள்ளுவநாயனார் ஒருகால் துணிந்து, அம்மிகுதிபற்றி மகளிர் மனத்தை உவமையாக் கொண்டனரோ என்று எண்ணப் புகுமளவில், கவிசக்ரவர்த்தி கம்பரே தோன்றி "மஞ்சர்க்கும் மாதரார்க்கும் மனமென்பது ஒன்றேயன்றோ'' என்னுங் கட்டுரையைக் கூறி விலக்குகின்றார்.

திருக்குறள் நூலில் நன்கு பயின்றுள கம்பர், 'மகளிர் மனம்போலவேறுபடும்' என்று பெண்பாலர் மனத்தையே பிரித்துக் கூறியிருக்குமிதை மறுத்தல் வேண்டுமெனும் நோக்கத்தோடு அவ்வாசகம் இயம்பினாரோ, மற்றுத் தம்முடைய உணர்வால் எய்திய முடிவை மட்டுமே செப்பினாரோ அறியோம். அஃதெவ்வகைத்தாயினும், நம்போலியர் வள்ளுவரது தெய்வவாக்கை எளிதில் அயிர்த்தலேனும் விலக்கலேனும் செய்யத் துணிதல் ஒண்ணாது. நம்முடைய கருத்தினின்று அவரது கருத்துக்கள் மாறுபடுவனபோல் தோன்றுமிடங்களில், நம் உணர்ச்சியு மறிவுந்தான் எட்டவில்லையோ, மற்று அவர் உரைத்ததே உண்மையோ என்னும் நினைவுடையராய்க், கற்றனைத்து மூறு மறிவாகையால், மேன்மேலுங் கற்பதல்லால் நங்கடமை வேறிலதெனத்தேர்ந்து, அவருடைய வாய்மையை உணருநாள் எய்தும் வரையில் காத்திருப்பதே நேரிதாம்.

இனி இவையனைய குறள்களைத்தான் ஆய்வானேன். யாவராலும் ஒரு மனதாய் உண்மையென ஏற்கப்பெற்றிருக்கின்ற குறள்களைக்கொண்டு என் செய்தோம்!



OFFICE OF THE REG… MAD…

# ஏமாங்கதத் திளவரசன்

[By Kind Permission of Messrs. B. G. PAUL & Co., Madras.]

## 3. விந்தை வலவன்

285 பக்கத் தொடர்ச்சி.

துளகர்த்தனுக்குத் தேரோட்டும் பதவியை விரும்பிய இவ்வெண்மரும் வெகு விரைவில் இரதமும் குதிரைகளும் இயைந்தவாறு திட்டம் செய்து ஓட்ட வாரம்பித்தனர். பார்வையெல்லாம் சிங்கமுகனுக்கு அப்பாகச் சிறுவன்மீதே பொருந்தி யிருந்தது.

உலூகக் குறிப்பறிந்து உய்க்கும் அவன் கல்வியினது அளவின் கரைகாணாது வேந்தன் வியப்படைந்தான். கொடிஞ்சிமுனை நின்று காற்றிற் கலையலைய வள்வார் ஏந்தி இவ்விளம்பாகன் வருந்தோற்றம் வாசவனது உள்ளந்தனைக் கொள்ளைகொண்டது. பந்தயம் ஓடினோர்க்குப் படைஞர் தம் கைகொட்டி ஊக்கம் விளைத்தனர். ஏனைய எழுவரும் இருசுற்று வருவதன்முன் இச்சிறுவன் மூன்றையும் முடித்துச் சோர்விலனாய், வெய்துயிர்ப்பேனும் வியர்வேனும் கொள்ளானாய்ச் சிங்கமுகனுக்கு எதிர்வந்து தன் தேரை எளிதில் நிறுத்தினான். மந்திரத்தாலல்லாது இவ்வகை எந்திரம் செலுத்துபவர் எங்குளர் என, இறும்பூது எய்திய வேந்தன் உடைவாளையவனுக்குப் பரிசளித்து, வாசவனை நோக்கி, "இவனே வாசவ, நின்பொற்றேர் அமர்ந்து தெய்வமெனக் காக்க வல்லவன்,'' என்று காட்டினான். வாசவனும் ஆர்வத்துடன் "ஆம். ஐய, வடிவினில் மன்மதனே யானாலும் கிளிகளன்றிக் குரகதமும் உய்க்க வல்லவன் என உணர்ந்தேன்,'' என்று வியந்து கூறினான். பிறகு மன்னவன், "என் மகன் இவன் நினதுயிர் என்பதை மறவாய் வலவ,'' என இயம்ப, புதியபாகன் "அஃதே ஐயனே, மறந்தும் உய்வேனோ!'' என்று இறைவனைத்தொழுது தேர் அமர, வாசவனும் தந்தையின் தாள்பணிந்து அத்தேரின்மிசை ஏறி வைகினான். "வீரர்காள் ஏகுங்கள், ஏகுமுன் இறுதியில் ஒன்றுயான் உரைப்பேன். வெற்றிக்கு வேண்டிய அளவுமீறி உங்கள் வீரந்தான் அழைக்கும்வரையில் போரிலே பகைவரைத் தொடர்ந்து நும் இன்னுயிர்க்கு வீணே இடையூறு தேடாதீர். வென்றபின், தோல்வியுற்றவர்மாட்டு இரக்கம் காட்டுவதே நுந்தம் முதற்கருத்தாய் இருக்கட்டும். தோல்வியோ அடைவீராயின் இத்திருநகர் நலங்கெட மீண்டுமிங்குக் காலடி எடுத்துவைக்க நினையாதொழிவீர். நல்ல ஓரையும் நண்ணியது, நண்பர்காள் நடமின்'' என, வேந்தன் விதித்து விடுத்த வீரர், "ஏமாங்கதத்திறைவா போற்றி, அருந்தவத் தலைவா போற்றி, தாயோடு தந்தையும் போன்ற ஐயனே போற்றி, வள்ளலே போற்றி, சார்பிலர் சிங்கமே போற்றி போற்றி, கொற்றவா போற்றி'' என்று துதித்தலோடு வாசவன் ஊர்ந்த தேர்தனைச் சூழ்ந்து நடக்கலாயினர்.

இன்னவாறு ஏகிய தானை சிறிதுதூரம் செல்லா முன்னம் பொன்திகழ் தேர்தனில் வீரப்பொலிவுடன் வீற்றிருந்த வாசவனை உய்த்துவரும் வலவனது திறத்தைக்கண்டு வெள்கி அருணனும் கடல்புக் கொளித்தான். நகரின் எல்லையை நண்ணநண்ணத் தேரினுள்ளிருந்த நம்பி அமைதியற்று நாற்புறமும் பார்ப்பதும், சாரதிக்கு ஏதோசொல்ல வாயெடுத்து எடுத்துப் பின்விடுப்பதும் ஆகிப் பிறகு "வலவ, நம் படையைச் சிறிதூரம் முன்னே செல்லவிடு, நாம் சற்றுப் பின்னாவோம்'' என்றனன். அதற்குப் பாகன், "அவ்வாறு செய்யின் இப்படை யெழுப்பும் புழுதித்திரள் நின் திருமேனியில் படியுமே, அது தக்கதன்று'' என்று மறுத்தானேனும் வாசவன், "யானறிவேன் அது. இருப்பினும் யான் சொல்லும்வண்ணம் செய்'' என்று மீண்டும்விதித்ததாலிச்சாரதி தேர்தனைப் பின்கொடு செல்லச் சேனையும் முந்திப் போயது. போனபின் இளவரசன் பாகனைப் பின்னும் விளித்து, "எப்பெயர் உடையாய் நீ? அரியதோர் உதவி எனக்கு நீ புரிவையோ?'' என்று வினவினன்.

"என்னை அங்கதன் என்றழைப்பர்.''

"குமரவேள் அனைய நிற்கு ஒரு குரங்கின் நாமம் வந்த தென்னைபோ!''

"ஐய, ஈன்றோர் இட்டபேரும், அவர்செய்த வினையைப்போன்றே மக்களைத் தொடர்ந்து வருகின்றது.''

"அங்கதா, நீயும் மனம் நொந்துளாய் போலும். மாதரார் மெல்லிய இக்குரல் எங்குக் கற்றாய்? கண்ணுளர் கூட்டத்தில் நீ பயின்றதுண்டோ?''

"வேந்தே இந்த வையமே ஒருநாடக அரங்குதான் என்று அறிவாய்.''

"சாரதி, நின் கீதை யொன்றும் கேட்க எனக் கிப்பொழுது காதில்லை. என் மனமோ முந்திப்போய் மற்றோர் இடம் பொருந்தியுளது. வெற்றுடம்பு ஒன்றையே நீ இத்தேரில் கொண்டு செல்கின்றாய். அம்மனம் போயுள இடத்தைத் தேடி யடையவே உன்னுதவி வேண்டுகின்றேன். அங்கதா, காதலின் கவர்ச்சி அறிவையோ நீ?...அறிந்திடின்...வலவ, நீ அறிவாயாயின்...என்னென்றுரைப்பேன்....''

"காதலோ துறக்குமென்பர் தத்துவத் திறமறிந்த கவிவாணர். மற்று, நீ காதலால் கவரத்தான் கற்றாயாயின் சொற்றடுமாறலும் இயற்கையே.''

"வைதனை, வலவ, நீ என்னை அருமையாய் வைதனை! கூரிய நின் நாவினால் என் மனம் எழுந்த மாற்றம் அங்ஙனே பிளந்து போகின்றது,'' என்று வாசவன் நெட்டுயிர்ப்பு வீங்கினான்.

இதன்பின் இருவரும் ஒன்றும் உரைத்திலர். தூரத்தில் படர்ந்த சேனையும் திரைச்சீலையில் ஆடிய சாயைபோல் அடிவானத்தில் தோன்றியது. இரதமும் சரயுவின் கரைக்கருகு வந்துசேர அங்கதன், "சேனைக்கு நாம் சாலப் பின்னிடைந்தோம், விரைந்து செல்லவோ? இருள்புகின் பாதை பிரிந்துபோதலும் நேரும்?'' என வினவினன். வாசவன் அதற்கு மாறாகச், "சந்திரன் உதயமாவான், தானையைப் பிரியோம்; வலவ, நானிங்கு இறங்குகின்றேன். நீ இத்தேரைப் பாலத்திற்கப்பால் கொண்டுபோய் நான் வருமளவும் காத்திரு, நான் செல்லு மிக்கருமம் நின்பால் சொல்லுந் தரமன்று. அது யாதெனக் கேட்கும் உரிமையும், பாகனே, உனக்கில்லை.'' என்றுரைத்து இழிந்தபோது பாகனது கடைவாயில் கள்ளநகை யொன்று மெள்ளமெள்ள நடித்தது. வைத்து மறந்த இருநிதியைத் தேடிச்செல்வான்போல் வாசவன் பின்னாள் கூடுமிடம் இதுவெனப் பஞ்சரவல்லிக்குக் குறித்திருந்த

சோலையை நாடி நடந்தான். ஆற்றைக் கடந்த அங்க தன் மறைசிறை யடைந்தவுடன், தேறிற் பூட்டிய புரவி களுள் விசையிற் சிறந்த வொன்றைப் பிணிநீக்கி அதன் மீதேறித் தூரத்தில் தோன்றிய வேறொரு பாலத்தை நோக்கிக் காற்றினுங் கடுகி போடினன். ஓடுங்கால் மேலங்கியையுந் தலை முடியையுங் கழற்றிச் சேணத்துட் செருகித் தனது ஆடையைச் சிறிது திருத்தியு மிருக்கலாம்.

சிற்றலை தைவரச் சரயுவின் கரையைச் சார்ந்து நடந்த வாசவன் முன்தினம் கண்டவிடத்தில் தன் காதலி மீண்டும் வீற்றிருக்கக் கண்டான். தையலும் தன்முன் எதிர்வோனை எழுந்தோடித் தழுவிக், "காதல, அடியாள்பால் நீவைத்த அன்பு தான் என்னே! ஆயினும், நீ இயம்பிய உரையைக் காக்க இன்று வருவாய் என்று எண்ணிலேன். போர்முகம் நாடாமல் நீ நகரிலே தங்கிவிட்டதும் தகுமோ! என்னை நச்சியோ இது நீ செய்தது? உலகம் உன் வீரத்தைப் பழித்து வாய்வந்தன தூற்றுமே!" என்று நவின்றனளாய்க் கைகோத் தழைத்துவந்து அவனையொரு கல்லின்மீது தனதருகு அமர்த்திக்கொண்டனள்.

"போரிற்கே பஞ்சரா, போகின்றேன். அப்போரும் புஜங்கனுடன். விதியின் ஒரு சோதனைபோ விது! என் செல்வி, உன்னைப்பெற்ற தந்தையை யான் வலம் வந்து பணிதல் போக்கி வாள்விதிர்த்து அவனுடன் அமர் கருதவும் ஆபது!"

" காதற் செல்வ, கலங்கி இரங்கேல். புஜங்கன் பயந்த புதல்வி யான்என்பதை இங்கு மறந்திடு. மற்றச் செருக்களத்தில் என் தந்தை அவன் என்பதையும் நினையாய் '''

"முன்னது மறந்தேன், எனினும் பின்னது நினையா திருப்பது எங்ஙனம்! கூற்றினும் கொடியவன் அவன் என்றால், எனக்கு உயிரேயான நின்னைப் பெற்றளித்த கூற்றினிற்சிறந்த கருணை எக்கடவுளுக் குளது. உயிர் தரும் யமனை நான் பஞ்சரா, இங்குக் கண்டேன்."

"அன்ப, நின் உயிரையும் உடலையும் தனித்தனி துடைத்துப் பொருளையும் கவர்வதற்குத் தோன்றிய இவ்வுற்பாத அந்தகனை என்மேற் காதலால் இன்னணம் கொண்டாடுகின்றாய்" என்று பஞ்சரவல்லி தன்னுள் நினைத்தபோது அவள் மையழிந்த விழியிரண்டும் முத்துத் திரள்களை உதிர்த்தன. வாசவன் அதற்காற்றாது, "மாதெனும் மருந்தே, மனந்தனில் மாழ்கேல்" என அவளைக் கூந்தல்திருத்தியும் முகத்தோடணைத்தும் முதுகு வருடியும் தேற்றினன். தையலாள் சிறிது தேறித் தலைநிமிர்ந் திரங்கி நிற்க, ஐயனும் உயிர்ப்பு வீங்கிப் "போவது போரிற் காதல், வெய்பதாம் பிரிவிற் காற்றா வேதனை எய்துகின்றேன், பெயர்ந்து நான் வந்தாலன்றோ பிழைத்தவ னாவேன்" என்றான். இவ்வுரை செவியில் ஏற்ற பெண்ணவள் மேன்மேலும் அழுவதாயினள். வாசவன், "பஞ்சரா அழேல், கடைமுறை நாம் காண்பது இதுவே யாகலாம். வாய்த்த இச்சிறு பொழுதையும் அழுது கழிப்பதோ!" எனப் பரிவினோடும் உரைக்குங்கால் பஞ்சரவல்லி, "தலைவா, உனது அன்பின் அளவிற்கு ஏற்ற பாத்திரம் அல்லளே எளியள் நான் என்றெண்ணி அழுங்குகின்றேன். ஐம்பது புஜங்கனுக்கு மகளாய்ப் பிறந்தாலும் என்வரையில் ஆளாவேன். உத்தம, உன் பொருட்டே என் இழிதகைப் பிறப்பை நினைத்து நினைத்து நைவது மாகும். எனினும் என்! ஐய எனது அன்னையுளள் ஐம்புலன் அவித்த வசிட்டனுக்கு அருந்ததியாதல் அருமையன்று. புஜங்கனைத் தொழுதெழும் பெண்மையே பெண்மை. அசோகவதியன்னையாரைப் பார்த்தேனும், அருள்வள்ளலே, நின்னடிமையை அளித்தி; பெரும, தமியளை அளித்தி" எனத் தொழுதனள்.

# அப்பர்

## 3. அப்பர் சிவஸ்தல யாத்திரைகளைப்பற்றிய புராண வரலாறு

### 9. திருவையாற்றில் அப்பர் சுவாநுபவமும் அவர் பாடிய தேவாரப் பதிகங்களும்.

290 பக்கத் தொடர்ச்சி

**திருக்கயிலாயத்தில்** கடவுள் வீற்றிருக்கும் கோலம் எவ்வாறான திருக்கோலமோ, அதை எவ்வாறு அப்பர் திருவையாற்றில் கண்டாரோ என்னும் சங்கை யாவருக்கும் நேரத்தக்கதே. கைலைமலையோ, பனி உறைந்து மூடப்பட்டும், பகலும் இரவெனக் காணத்தக்க பல விருக்ஷங்கள் நெருங்கியும், தமிழ்நாட்டில் நாம் கண்டிலாத பஞ்சபூத சையோகங்களும் நிகழப்பெறும். இத்தகைய காட்சி அப்பர் திருவையாற்றில் எவ்வாறு கண்டாரென்றும் வினவக்கூடும். இதன்றியும் இவ்வற்புதம் நடந்ததைப்பற்றி அப்பர் தேவாரத்திற் சாட்சியம் உண்டோ என்றும் சிலர் கேட்கலாம். இவற்றை ஆராய்வோம்:—

அப்பர் திருவையாற்றில் பாடிய ஒரு திருவிருத்தத்தில்* "நெடுநீரினின்றேற நினைந்தருளி, ஆக்கினவாறு" என்னும் தொடர் மொழிகளாலும், அப்பாசுரத்தின் பின்பாசுரத்தில் "நெடுநீரினின்றேறநினைந்தருளி உருக்கினவா" என்று காணப்பட்டமையாலும், இவ்வற்புதம் நடந்ததற்கு அப்பர் வாக்கியமே சாட்சியாகும்.

பூமியின்கண் பற்பலவிடங்களில் கோயில்கொண்டெழுந்தருளியிருக்கும் கடவுள்சொரூபம் ஆங்காங்குள்ள க்ஷேத்ரமாகாத்தாலும், நிலத்தின் உயர்வுதாழ்வாலும், ஸ்தாவர ஜங்கமங்களாலும் பேதப்படுவதன்று. திருக்கயிலையில் காணப்படும் தரிசனம் சிவம் சக்தியிரண்டின் ஐக்கியமே * தன் இடதுபாகத்தை உலகன்னைக்கு ஈந்ததால், உலக உற்பத்தி, சத்தியும் சிவமுமாய் வெளிவந்ததெனப் பெரியோர் கூறும் தத்துவ விளக்கமான தன்மையே திருக்கயிலையில் கண்டறியக்கூடிய திருக்கோலமாதலால், அக்கோலத்தின் சத்தியத்தை அப்பருக்குத்திருவையாற்றில் உணர்த்துவோமென்று பரமனார் வாக்களித்தார். அங்ஙனம் அவர் கண்டதற்கே அப்பர் தேவாரத்தில் அத்தாட்சிகள் உள. கோயில் கயிலைமலையாயும், மற்றுமுள்ள திருவையாற்றுப் பொருள்கள் அப்பருக்குக் கைலைமலைப் பொருள்களாயும் காணப்பட்டன வென்பது புராண மரபு. $

இத்திருப்பதியில் திருநாவுக்கரசர் பாடிய பதிகங்கள்பல. அவற்றுள் யாவராலும்கொண்டாடப்பட்டது "மாதர் பிறைக் கண்ணியானை" என்னும் முதலினைக் கொண்ட பதிகமாகும். இது பதினொரு பாசுரங்களமைந்ததாய் ஒவ்வொருபாசுரத்தினிறுதியும் "கண்டேனவர் திருப்பாதம் கண்டறியாதன கண்டேன்" என்னும் ஒருவகைப் பல்லவிகொண்டு விளங்கும். சம்பந்தர் கூறியவாறு "உரைசேரும் எண்பத்துநான்கு நூறாயிரமாம் யோனிபேதம், நிரைசேரப் படைத்தவற்றி னுயிர்க்குயிராய் அங்கங்கே நின்றான்" தன்மையே இப்பாசுரங்கள் சத்திசிவ சொரூபத்தை மாக்களிடத்தும் கண்டு களிக்கற்பாற் றென்பதுபோல் விரித்துக் காட்டுகின்றன. காதன் மடப்பிடியோடு களிறு வருவதும், கோழி, குயில், மயில், கருங்கலை, நாரை, கிளி, முதலியன தம் பேடையோடாடிக்கலந்து வருவன கண்டதே, அப்பர் கடவுளின் திருப்பாதம் கண்டு முற்றும் கௌரிசங்கர கோலமாய்த் * தரிசித்தார். ஜடமயமாய் அஞ்ஞானத்தில்தோன்றும் உலகம், ஞானவொளி பட்டவுடன், இயற்கைத்தோற்றம் கண்டவிட மெல்லாம் கடவுள்மயமாய்க் காணப்படும் சுவானுபவத்தை † இப்பதிகம் வெளியாக்குகின்றது.

இஃதன்றியும் இப்பதிகத்தில் பொருள் விசேட அமைவுடன், வெண்டளை முற்றும் ஒவ்வொரு (அறுசீர்) அடிகளிலும்பொருந்தியதால், அதன் இனியஓசை இசைக் கருவிகளுடன் பாடும்போது நமக்குப் பிரம்மானந்தத்தை விளைவிக்கும். இத்தகைய நாதமே அப்பர்மீது சமணரேவிய யானையை அஞ்சியோடச் செய்தது. இப்பதிகயாப்பே விருத்தப்பாக்கள் தமிழிலேறவும் வழியுண்டாக்கியதென்பர். இத்தகைய காந்தாரப் பண்ணமைந்த இப்பதிகத்தில் அப்பர் தான் * பற்பல காடு, மலை, நாடுகளில் யாத்திரை செய்தமையும் † உள்ளம்மெலிந்த சிந்தையராய்ப் பரமனை யுணர்ந்து உருகுவதையும் இவர் திருவாக்கு இவரையுமறியாமல் வெளியிடுகின்றது.

‡ திருவையாற்றில் அப்பர் பாடிய பதிகங்களாவன, மேற்சொன்ன காந்தாரப் பண்ணமைந்த பதிகம்—1, பண் பழந்தக்கராகம் பெற்றது—1, திருநேரிசை—3, திருவிருத்தம் – 3, திருக்குறுந்தொகை—2, திருத்தாண்டகம்—2, ஆக 12 திருப்பதிகங்களில் 124 பாசுரங்களுள. இவற்றை நாம் கவனித்து நோக்குவோமாயின் இத் (திருவையாறென்று சொல்லப்பட்டது திருவாடி) தலம் அப்பர்காலத்தில் எவ்வாறு பொலிந்திருந்ததென்பதை அறிந்து கொள்ளலாம். சம்பந்தரால் "வட்டமதிலுட் டிகழும் வண்திருவையாறே," "மொட்டிடு கமலப்பொய்கையாற் சிறந்த

---

* தாக்கின வாசல மேவினை காட்டியுந் தண்டித்தநோய்
நீக்கின வா! நெடு நீரினின் றேற நினைந்தருளி
ஆக்கின வாறடி யேனையை யாற னடிமைக்கனே
நோக்கின வாதொண்ட னேனைத்தன் பொன்னடிக்
[கீழெனையே—3

தருக்கின நான்றக வின்றியு மோடச் சலமதனுல்
நெருக்கின வாநெடு நீரினின் றேற நினைந்தருளி
உருக்கின வாறடி யேனையை யாற னடிமைக்கனே
பெருக்கின வாதொண்ட னேனைத்தன் பொன்னடிக்
—திருவையாறு-திருவிருத்தம் [கீழெனையே—4

[4-ம் பாசுரத்தில் குறித்தது சமணர் தன்னைக் கல்லில் பூட்டி கடலிலெறிய அரன்நாமம் பாடி யுய்ந்ததும், என்றும், 3-ம் பாசுரத்தில் குறித்தது திருவையாற்றுக் குளத்திலெழுந்து கைலைத்தரிசனம் கண்டதும் என்றும் கொள்ளற்பாலன. இன்றேல் ஒரே விஷயமாகின், கூறியது கூறலாகும்.]

* பொன்மலைக்கொடி யுடனமர் வெள்ளியம் பொருப்பிற்
றன்மை யாம்படி சத்தியும் சிவமுமாம் தன்மை
பன்மை யோனிக ளாவையும் பயில்வன பணிந்தே
மன்னு மாதவர் தம்பிரான் கோயில்முன் வந்தார்
பெரியபுராணம் 374.

$(i) காணு மப்பெரும் கோயிலும் கயிலைமால் வரையாய்ப்
பேணு மாலய னிந்திரன் முதற்பெருந் தேவர்
பூணு மன்பொடு போற்றிசைத் தெழுமொலி பொங்க
தாணு மாமறை யாவுந் தனித்தனி முழங்க. ஷை 375.

(ii) தேவர் தானவர் சித்தர்விச் சாதர ரியக்கர்
மேவு மாதவர் முனிவர்கள் புடையெலா மிடையக்
காவி வாள்விழி யரம்பையர் கானமு முழவும்
தாவி வேழ்கடன் முழக்கினும் பெருகொலி தழைப்ப.

(iii) கங்கை யேமுதல் தீர்த்தமாங் கடவுண்மா நதிகள்
மங்க லம்பொலி புனற்பெருந் தடங்கொடு வணங்க
வெங்கு நீடிய பெருங்கண நாதர்க ளிறைஞ்சப்
பொங்கி யங்களாற் பூதவே தாளங்கள் போற்ற 377.

(iv) அந்தண் வெள்ளிமால் வரையிரண் டாமென வணைந்[தோர்
சிந்தை செய்திடச் செங்கண்மால் விடையெதிர் நிற்ப
முந்தை மாதவப் பயன்பெறு முதன்மையான் மகிழ்ந்[தே
நந்தி யெம்பிரா னடுவிடை யாடிமுன் னணுக. 378.

(v) வெள்ளி வெற்பின்மேன் மரகதக் கொடியுடன் விளங்[கும்
தெள்ளு பேரொளிப் பவளவெற் பெனவிடப் பாகம்
கொள்ளு மாமலை யாளுடன் கூடிவீற் றிருந்த
வள்ள லாரைமுன் கண்டனர் வாக்கின்மன் னவனார்
379.

* மாதர்ப்பிறைக் கண்ணி யானை
மலையான் மகளொடு மென்னும்
கோதறு தண்டமிழ்ச் சொல்லாற்
குலவு திருப்பதி கங்கள்
வேதமு தல்வரை யாற்றில்
விரவுஞ்ச ராசர மெல்லாம்
காதற் றுணையொடும் கூடக்
கண்டே னெனப்பாடி நின்றார்.
பெரியபுராணம்.

(தேவாரத்தில்)
உமையலா துருவமில்லை யுலகலா துடையதில்லை
நமையெலா முடையராவர் நன்மையே தீமையில்லை
கமையெலா முடையராகிக் கழலடி பரவுந்தொண்டர்க்
கமைவிலா வருள்கொ டுப்பார் ஐயனை யாறனாரே
திருவையாறு—திருநேரிசை 9.

† நீரானே தீயானே நெதியானே கதியானே
ஊரானே யுலகானே யுடலானே யுயிரானே
பேரானே பிறைசூடி பிணிதீர்க்கும் பெருமானென்
றூராத வையாறர்க் காளாய்நா னுய்ந்தேனே.
திருவையாறு - பண் - பழந்தக்கராகம் 6.

* வடு மதிக்கண்ணி யானை யேந்திழை யாளொடும் பாடிக்
காடொடு நாடு மலையுங் கைதொழு தாடா வருவேன்
ஆட லமர்ந்துறை கின்ற வையா றடைகின்ற போது
பேடை மயிலொடுங்கூடிப் பிணிந்து வருவன கண்டேன்
கண்டேனவர்திருப் பாதங் கண்டறியாதன கண்டேன்5

† தண்மதிக் கண்ணியி னானைத் தையனல்லாளொடும்பாடி
உண்மெலி சிந்தைய னாகி யுணரா வுருகா வருவேன்
அண்ணல மர்ந்துறை கின்ற வையா றடைகின்றபோது
வண்ணப் பகன்றிலோடாடி வைகி வருவன கண்டேன்
கண்டேனவர் திருப்பாதம் கண்டறியாதன கண்டேன்.6

‡ தஞ்சாவூர் ஸ்டேஷனிலிருந்து வடக்கே கற்சாலை மார்க்கமாய் 6-மைலில் கண்டியூர் இருக்கின்றது. திருக்கண்டி

பதியெனவும், $ தேசத்தார் பரவி யேத்தப்பட்ட தெனவும் "¶நறவமார் பொழில்கள் சூழ்ந்ததெனவும் மல்லிகை மலருஞ் சோலைகளுடையதெனவும், அருந் தவ முனிவோ ரேத்தும் ஊரெனவு மறிகின்றோம். அது பல அழகிய வீதிகளும், *உடர்ந்த கொடிகளு டைய† வீடுகளும், ஆடல் அரங்குகளும், மறையோர் வேதகோஷ்டமும் நிறைந்ததெனவும் காண்கின்றோம்.

இத்தகைசெல்வப் பதி, சிவபக்தர்கள்‡ மிக்கதாய் அவர்கள் கூடித்தொழுது ஆடிப்பாடுகின்ற காட்சி உடையதாய்த்தேவாரத்தில் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. ஆகையால் இந்நகர் மூவர்காலத்தில் ஒருபெரிய$ ராஜதானிப் பட்டணமென விளங்கியதென்னலாம்.

---

பூருக்கு வடக்கே கற்சாலை மார்க்கமாய் 1½ மைலில் திருவாடி என்று வழங்கும் திருவையாறு காணப்படும்.

$ திருவையாறு திருநேரிசை 3 வரி 3.

¶ ஷை 6 வரி 3 ஷை 7 வரி 3 ஷை 9 வரி 3.

* காந்தார மிசையமைத்துக் காரிகையார் பண்பாடக் கவினுர் வீதித், தேந்தாமென்றரங்கேறிச் சேயிழையார் நடமாடுந் திருவையாறே.

சம்பந்தர்-பண்-மேகராகக் குறிஞ்சி 6. வரி 3—4.

† மதியொன்றிய யொன்றை வடத்தான்
மதியொன்ற வுதைத்தவர் வாழ்வு
மதியின்னொடு சேர்கோடி மாடம்
மதியம்பயில் கின்றவை யாறே. ஷைபண்-தக்கராம் 2.

‡ முத்திசைக்கும் புனற்பொன்னி மொய்பவளம் கொழித்து [ந்தப்
பத்தர்பலர் நீர்மூழ்கிப் பலகாலும் பணிந்தேத்த
எத்திசையும் வானவர்கள் எம்பெருமா னெனவிறைஞ்சும்
அத்திசையா மையாறர்க் காளாய்நா னுய்ந்தேனே

திருவையாறு-பழந்தக்கராகம் 9 (அப்பர்)

$ கட்டுவட மெட்டுமுறு வட்ட முழவத்தில்
கொட்டுகர மிட்டவொலி தட்டும்வகை நந்திக்
கிட்டமிக வட்டமவை யிட்டவ ரிடஞ்சீர்
வட்டமதி லுட்டிகழும் வண்டிருவை யாறே.

சம்பந்தர்-பண்-இந்தளம் 3.

# சிலப்பதிகாரமும் மணிமேகலையும்

## 4. நாட்டு வரலாறும் இலக்கியமும்.

நாட்டு வரலாற்றிற்கும், இலக்கியத்திற்கும் உள்ள பேதம், சாத்திரங்களுக்கும் (Sciences) கலைகளுக்கும் (Arts பொதுவாக உள்ள பேதமே. ஒரு நாட்டின் பண்டைக் காலத்து அரசாட்சி, சன சமூகம், இவைகளைப் பற்றிய வெளித் தோற்றங்களையும்; நாளாகநாளாக அவ்வக் காலங்களுக்கேற்ப அவை மாறிவந்த விதத்தையும்; இறந்தொழிந்த நாட்கள் இவையெலாம், நிகழ்காலத்திற்கு அரசியல் சமூகக்கோட்பாடு இவைதமைப் பற்றிய வரையில் சேமித்து வைத்துள்ள பொருள்களையும்; கோவைப்படுத்திப் பேசும் சாத்திரமே நாட்டுவரலாறாகும். இலக்கியமோ, நாட்டுவரலாறு குறிக்கின்ற அரசியல் முறைகளையும், சமூகவாழ்க்கைச் சாதனைகளையும், இவைகளால் விளைந்த நன்மைகளையும் தீமைகளையும், அமைதியையும் போரையும், நாட்டுவரலாற்றைப்போல் காலக்கிரம முறைவழியே கோவைப்படுத்தாமல், இவைகட்கெல்லாம் மூலாதாரமான மானுடதத்துவத்தை ஆராய்ந்து செல்கிறது. "உள்ளதை உள்ளவாறு கூறுவேன்" என்று, சாத்திரமுழக்கம் முழங்கியெழும் நாட்டுவரலாறு. இலக்கியத்திற்கோ, யாதேனும் ஒன்று உளதோ அன்றி இலதோ என்ற, கவலையில்லை; அவ்வொன்று, பொதுவில் உள்ளவாறு எத்தன்மைத்து என்றறிய வேண்டும் என்ற அவாவும் இல்லை; "உள்ளதாக யான் கருதும் ஒன்று,என்மனத்தினுள் எழுப்பிய உணர்வுகள் இவை" என்று அவைகளை வெளியிடும். பழையகாலத்துப் போர்களைப் பற்றி நாட்டுவரலாறு பேசும்; ஸ்ரீமதி ஸரோஜனி தேவிமொழிவதுபோல் (wandering singers) இலக்கியமும் பேசும். ஆனால்? கழுமலப் போரில் சேரமான் கணைக்கா லிரும்பொறையைச் சோழன்செங்கணான் முறியடித்து வாகைசூடினான் என்பதனைக் கூறும் நாட்டுவரலாறு; தகுந்த சான்றுகளும் ஒப்வும் பெற்றிடின், சோழனது தானை எத்துணைப் பெரிது, சேரமான் சேனை எத்துணை வலிது, பின்னவன் தோல்வியுற்ற காரணம் யாது, என்பன வாகியவற்றையும் செப்பும். இலக்கியமோ, பொய்கையார் கையினால், 'களவழி நாற்பது' என்னும் விதையை மனிதருள்ளத்து விதைத்து, போர்மேல் வெறுப்பு என்னும் உணர்வைப் பயிர்செய்யும். ஆயிரத்து எழுநூறு ஆண்டுகளுக்குமுன், சோழன்நலங்கிள்ளியுடன் பொரவியலாது, அவன் மரபிலேயே உதித்து அவனுடன் அரசுரிமைக்குப் போர்புரிந்த நெடுங்கிள்ளியென்பான் ஆவூர்க் கோட்டையுள் ஒடுங்கிக் காலந் தாழ்த்திப் பின் உறையூரைச் சேர்ந்தான் என்ற வரலாறொன்றைமட்டும் வரையும் நாட்டு வரலாறு. அம்முற்றுகையால் விளைந்த துயரைக் கோவூர் கிழாரின் உள்ளமெனும் யாழ்வழியே இலக்கியம் இசைப்படுத்தும். உதாரணங்கள் விரிக்கிற்பெருகும். அலெக்ஸான்டர் டூமாஸ், விக்டர் ஹ்யூகோ, வால்டர் ஸ்காட், புல்வர் லிட்டன், சார்லஸ் கிங்ஸ்லே முதலிய நாவலாசிரியர் நாவல் நூல்களும், ஷேக்ஸ்பியர் எழுதிய சரித்திர சம்பந்தமான நாடகங்களும், நாட்டுவராற்றிற்கும் இலக்கியத்திற்கும் உள்ள மாறுபாடுகளையும், ஒரு நாட்டின் பண்டைக் காலத்தைப்பற்றியோ, நிகழ்காலத்தைப் பற்றியோ பேச நேரிடின், இலக்கியம் அதனை எவ்வாறு செய்து முடித்திடும், எவ்வளவு தூரம் உள்ளதை உள்ளவாறே புகலும் என்பவைகளையும், செவ்வனே விளக்குவன.

எனவே, "அதன் காலத் துள்ளவற்றை, மிகையுங் குறையுமின்றிச் சொல்லிச் செல்லும் நேர்மையா" லேயே (கலாநிலயம்: வால் 2. பக். 132) சிலப்பதிகாரத்தின் பெருமை விளைகின்றது என்பதாலும், சங்க நூல்களும் அப்பெருமையை அவ்வகையிலேயே அடைந்துள்ளன என்பதாலும், இந்நூல்கள் யாவும் தமிழ்நாட்டு முன்னாள் நிலைமையைப்பற்றி ஓரே படித்தாகச் சிற்சில விஷயங்கள் சொல்வதால், அந்நூல்கள் சொல்வன யாவும் உண்மைக்கு மிகை குறையில்லாத் தன்மையன என்றுரைப்பதாலும், ஏது பயன்!

296பக்கத் தொடர்ச்சி



## 5. இயற்கை நெறி

உள்ளதை உள்ளவாறு கூறுவதே"இயற்கை நெறி" யென்பதும், இந்நெறியைப்பின்பற்றியதாற்றான் சிலப்பதிகாரமும் மற்றுள்ள பழந்தமிழ் நூல்கள் பலவும் உயர்ந்த இலக்கியமாகின்றன என்பதும் ஸ்ரீ. இராமானுஜன் துணிபு. உள்ளதை உள்ளவாறு கூறுவது சாத்திரமுறை ஆகும், இலக்கியமுறை ஆகாது என்பதை மேலே குறித்துளேன். உள்ளதை உணர்ந்தவாறு கூறுவதே இலக்கியம். இவ்விலக்கிய இயல்பைத்தான் சிலப்பதிகாரம் கொண்டுள்ளது; இதுதான், அது "மனதள்ளும்" சிலம்பாகத் தமிழ்நாட்டு மணியாரமாகப் பொலிவதன் காரணமேயன்றி, ஸ்ரீ இராமானுஜன் புகழும் புகைப்படத் தத்துவமன்று. புகைப்பட மியற்றல் கலையின் செயலன்று என்ற எண்ணத்தைத் தொடர்ந்துசென்று எய்திய முடிபே, ஆஸ்கார் வைல்ட என்பவரின்"பொய்யாற் பொலிவது புலமை" யென்றமுடிபு."பொய்யாற் பொலிவது புலமையோ?" வென்ற ஐயத்தைப் "புலமைக் குரிய பொய்" (கலாநிலையம்: வால் 2. பக்கம். 121.) என்ற தலையங்க வாயிலாகக் 'கலாநிலயம்' களைந்தது என்பர் ஸ்ரீ. இராமானுஜன் (கலாநிலயம்: வால் 2 பக். 212). எனவே, அத்தலையங்கம் பின் வருவன கூறியிருப்பதை அவர் மறந்திரார்:—"அவர் (ஆஸ்கார் வைல்ட்) கூறுவதை யெல்லாம் நுணித்து உணருங்கால் நமதருந்தமிழ்ப் புலமைக்குத்தான் இலக்கணம் வகுத்தாரோ என்னும்படி இருக்கின்றது...சிலப்பதிகாரத்தினுள் மிகச்சிறந்த பாகமாகிய கானல்வரியின்கண் அமைந்த அழகு "மதியுமிழ்ந்து கதிர் விழுங்கி வந்தவிம் மருண்மாலை" என்பது போன்ற அடிகளால் திகழ்கின்றது." புலமைக்குரியதான பொய்யைக் கலாநிலயம்சொல்வதுபோல், சிலப்பதிகாரம் கொண்டுள்ளதென ஸ்ரீ. இராமானுஜன் தெளிந்தாராயின், அக்காப்பியமும் சங்கநூல்களும் அவைதமின் காலத்திருந்தனவற்றை மிகைகுறை யின்றிச் சொல்வன என்ற கருத்தை அவர் கைவிடாதிருப்பது வியப்பே. ஏனெனில், புகைப்படம்பிடித்தலேயான "இருப்பன கண்டு இருக்குமாறே கூறுவது காவியப்பயிற்சியின் பாலபாடம் (கலாநில: வால் 2 பக். 122)" எனவுரைக்கும் கலாநிலயம்."ஆம், எனதையம்தீர்ந்தது" (கலாநிலயம்: வால் 2. பக். 212.) என்பர் ஸ்ரீ. இராமானுஜன். இவ்வாறாக, "நண்ப, சிலப்பதிகாரத்தைப் பற்றி நீர் கூறியதில் முன்னுக்குப்பின் முரணுளது. அவ்வழகிய நூலும் சங்கநூல்களும் அவைகளின் காலத்தைப் பற்றிய மிகைகுறை யற்ற வாய்மைச் செய்திகள் என்றுரைப்பது பொருத்தமன்று அவை இலக்கியம். புலமையின் முதிர்ந்து பழுத்த கனிகள். "அம்ம! இவ்வா றிருந்தாற்று ளகாதோ" என்று நம்பால் ஒரு அவாவினை விளைவிக்கின்ற (க. நி: 2: பக் 122) கவிஞரின் நூல்கள். "இவ்வாறுதான் இருந்தன" வென்று அறுதியிடும் நாட்டுவரலாறுகள் அல்ல. எனவே, அவை மொழிவதைமட்டும் நாம் கொண்டு "இருள் செறிந்த" காலமொன்றின் இருளை "உண்மை விளக்கங்களால்" நீக்கினோம் என்றுரைப்பது தகுதியோ?" என்றெண்ணிய நான், இவ்வெண்ணத்தைக் குறித்ததும், ஸ்ரீ இராமாநுஜன் "துணுக்குறுவ"தேனோ?

## 6. எனது வினாக்கள்.

இனி '"இயற்கை நெறிவழாது" என்பதன் பொருள் என்ன' என்ற என்கேள்விக்கு மற்றொரு வினாவினால் யானே மறுமொழி தந்துளேன் என்று நினைந்து ஸ்ரீ. இராமானுஜன் வியப்பெய்துகிறார். (க.நி. 2: பக் 212). எனது வினாக்களின் தன்மையை ஸ்ரீ.இராமானுஜன் உள்ளபடி அறிந்திலர். அவையாவும் நியாயவாத முறையால் பிணைக்கப்பட்டுள்ளன ஸ்ரீ. இராமானுஜன் குறிக்கும் இயற்கைநெறியானது இலக்கியநெறியன்றென்பதைச் சுருக்கமாகவும், அவரே சிந்தித்துணரும் வகையிலும் உரைக்கவேண்டும் என்பது என் கருத்தாயிருந்தது. ஆதலின், உள்ளதை உள்ளவாறுகூறுவதே ஸ்ரீ. இராமாநுஜனது இயற்கை நெறியென யான் ஒருவாறு அவர் மொழிகளினின்றும் அறிந்தேனெனினும், அதனிலிருந்தே அவர் தனது சிந்தனையைத் துவக்கவேண்டும் என்பது என் நினைவாயிருந்ததுபற்றி '"இயற்கைநெறிவழாது என்பதன் பொருள் என்ன?" என்றுவினவினேன். "உள்ளதை உள்ளவாறு கூறுவது" என்பதே ஸ்ரீ இராமனுஜனதுமறுமொழி ஆதல்வேண்டும் என்று எதிர்பார்த்து எனது அடுத்த வினாவை விடுத்தேன்."உமது இயற்கை நெறியைப் பின்பற்றியதாற்றான் பண்டைநாட் புலவர் பின்னாள் தோன்றியவரினும் மேம்பட்டுள்ளனர் என்பது உமதுமுடிபாதலின், அம்முடிவு நேரிதோ அன்றி நேரிலதோ என்றுராய்வதன்முன் "பண்டைக் காலத்திற்கும்" இடைக்காலத்திற்கும் வரையறை விதித்தல் அவசியம் என்றேன். பின்பு "எவ்வாறு வரையறை விதித்தாலும் உமது இயற்கைநெறித் தத்துவத்தை நிலைநாட்ட லரிது. இந்நெறியைக் கம்பனும் சேக்கிழாரும், ஆழ்வார்களும் பின்பற்றிலர். இவர்களையோ பண்டைக்காலப் புலவர்தம்மொடு கூட்டச் சரித்திர ஆராய்ச்சி இடந்தராது. இடைக்காலத்தில் இவர்களை நீர் வைக்கின்றீர் எனின், கவிதா வன்மையைப் பற்றியவரையில் இவர்கள் பண்டைய புலவர்தம்மினும் எவ்வாறு தாழ்ந்து நிற்பவர்?" என்று வினவினேன். எனது ஒரு வினா மற்றொரு வினாவிற்கு மறுமொழி தருகிறது என்று ஸ்ரீ இராமானுஜன் வியப்பெய்தியது எங்ஙனம் அமையும். (தொடரும்)

---

## மானேஜர் அறிக்கை.

ஸிங்கப்பூர் பினாங்கு தென்ஆப்ரிக்கா முதலிய வெளிநாடுகளிலிருக்கும் நமது சந்தா நேயர்களிற் சிலர் இவ்வருடத்திய சந்தா தொகையை இன்னும் அனுப்பாதிருக்கின்றனர். அந்நாடுகளுக்கு வி. பி. அனுப்ப இயலாதாகையால், நாங்கள் வி. பி. அனுப்புவோம் என்று எதிர்பார்த்துக்கொண்டு இருக்கின்றார்களோ, யாதோ! தயவு செய்து அவர்கள் உடனே சந்தாவை அனுப்பினால் நலமாம். அல்லது இப்பொழுது அனுப்ப இயலாத பக்ஷத்தில் எப்பொழுது அனுப்புவார்கள் என்பதையாகிலும் தெரியப்படுத்துமாறு கேட்டுக்கொள்கின்றோம். இரண்டும் செய்யாதபக்ஷத்தில் அன்னவர்க்குப் பத்திரிகை வேண்டும் வேண்டா என்பதை நாங்கள் அறிய மார்க்கமில்லை யாகையால் பத்திரிகையை நிறுத்திவைக்க நேரிடும்.

# மாறன் பாப் பாவினம்.

[293-வது பக்கத் தொடர்ச்சி]

இந்நூலைப்பற்றித் தெரிந்தவர் தெரிந்ததைக் கூறும்படி நாம் கேட்டுக்கொண்டதற்கிணங்க, எமது இலங்கைச் சந்தா நண்பர்களுள் ஒருவராய ஸ்ரீமான் A விஞசித்தம்பி அவர்கள், இதன் ஆசிரியர், திருக்குருகைப் பெருமாள் கவிராயர் என்பது மாறனலங்கார வரலாற்றாலும் பிறவற்றாலுந் தெரிகின்றது என்றும், அவ்வரலாற்றில் அவர் கால முதலியவற்றை விரிவாய்க் காணலாம் என்றும், அவர் ஆக்கிய ஏனைய நூல்கள், மாறனகப் பொருள், திருப்பதிக் கோவை, மாறனலங்காரம், திருக்குருகை மான்மியம், நம்பெருமாள் மும்மணிக் கோவை, மாறன் கிளவிமணி மாலை முதலியனவென்றும், நமக்கு அன்புடன் எழுதியிருக்கின்றார். 'ஆசிரியன்'

## ஆசிரியப்பா.

### நேரிசை யாசிரியப்பா.

காமரு பன்மரங் கஞலிய பொதும்பர்
பாமரப் பணையின் மதுகர மிழைத்த
முதிர்நறுந் தேற லொதுமலர் முன்னுபு
வரைதலின் வரையா தொழுகலி னிருவரு
மாறுபட் டொழுகிய மதியின ராதலிற்
றிருமகிழ் மாறன் றிருவருட் கிலக்கா
யொழுகா தவருளத் தொன்றா
மழுகா மதியின் மறுகுவல் யானே.

இது, நேரிசை யாசிரியப்பா. அலங்காரம் - உள்ளுறை யுவமத்தினுள் வினையுவமப்போலி. பகுதி - பகற்குறி. துறை - வருத்தங்கூறி வரைவு கடாதல். 1

### நேரிசை யாசிரியப்பா.

இறைவறங் கூரா வெறிபுனற் பொய்கைத்
துறைதொறுந் துவன்ற தோடவிழ் பன்மலர்
மாந்துபு வயினிறை வெய்திய கவரி
யேந்தெழின் மாடத் தீன்றகன் றுள்ளிப்
படர்வுழிப் படர்வுழிப் பணைமுலைக் குறுங்கண்
மடைதிறந் துவாக மடுநிறைத் தொழுகும்
பாற்றடி னியினோர் பழிதீர் பெடையின்
மாற்றருங் களியின் மகிழ்வர மூழ்கிய
பானிலாத் தெறுசிறைப் பவளவா யெகினந்
தணந்தயற் கழனிச் சாதிப் பெடையை
மணந்தத னனந்தலை மள்ளர்தா முழுத
நாற்றடி யதன்க ணறுந்தழை பதனழிந்
தூற்றெழுங் களங்க வுறபுன லாடிப்
பண்டுதன் மரீஇய பானிறப் பெடையைக்
கண்டுதான் வளைக்குங் காமரு கடல்கெழு
கண்ணகன் ஞாலங் கண்டுகண் களிப்பான்
விண்ணவர் வியப்பவு மேதகு படிமத்
தரவணைத் துயின்ற வரங்கத் தமுதி
னூரவுநீர்க் காவிரிக் குறுவய லூர
புல்லென பொதுவுணின் மார்பெனச்
சொல்லே னெம்மனத் தொடர்புடை யானே.

இதுவும் நேரிசை யாசிரியப்பா. இதன் வேறுபாடுங் காண்க. இதுவும் வினையுவமப் போலி, திணை-மருதம். கைகோள்-கற்பு. பகுதி-பரத்தையிற் பிரிதல். திணையிற் றிணை-பெண்பாற் கூற்றுப் பெருந்திணை. துறை-இல்லவை நகுதல். 2

### நேரிசை யாசிரியப்பா.

குவளையு நீலமுந் தவளவொண் பதுமமும்
பூம்பொறி வண்டு ளாம்பலுங் கஞலித்
திசைதிசை யோசனை தேங்கமழ் திவ்விய
வசைதீர் அந்தண் மயிலை வேலிப்
பொய்கையுட் ——* ந்தேன் பொதியவிழ் நறுமென்
செய்யபொற் றாமரைத் திருமல ரதற்கு
மாந்தினர் மதிமபர் வுறுத்தும் பாசடைக்
கரைசேர் வெள்ளிடைக் கலித்தெழு வனவாங்
கஞ்சா வினுக்குங் கஞ்சமென் றிடுகுறிப்
பெயர்மலி பான்மைப் பெரும்புன லூரன்
றெண்டிரைக் காவிரித் திருவரங் கேசன்
றொண்டர்தந் தொண்டர் தொடர்வினை யொரீஇய
போதம் புரந்தரப் புரைதீர் தம்முயிர்க்
கேதங் கொள்ளுனர்க் † (கி) டரிழைத் தகலா
தொல்லாப் புலன்வழி யுய்க்கும்
புல்லறி வினுட்குடி புகும்புன் மையனே.

என்பது, பயனுவமப்போலி, திணையும்பகுதியு மிதுவு மது. துறை - உழைய ரியற்பழித்தல்: பா-இதுவமது. 3.

### நேரிசை யாசிரியப்பா.

இனியதெள் ளமுதா யெறித்தரு கிரணப்
பனிமதி யகடுழப் பணைநெடும் பொங்கர்ப்
பூந்துணர் ததைஇய பொழிலெழி னள்ளிடை
யீர்ந்தண் கோட்டகத் தினமலர் முற்றிய
பொன்னிதழ்த்தாமரைப் பொற்பொகுட் டாசனத்
தரசுவீற் றிருந்த வரிதுணர் பான்மைச்
சேவலோ திமமொரு சிறைப்படு காவிற்
குறுகுபு கொடுமுட் டாழைவெண் டோட்டினும்
வைகலு நகைஇவை குறுபுன லூரன்
பூமக ளிலைகுலாம் பூண்முலைப் பொதுப்பத்
தேம்வழி பசுந்துழாய்த் திருமணி மார்பன்
றென்னரங் கேசன் றிருவருட் கிலக்கா
முரனுடை யோர்கட் குறுதுணை யெனவா
ழில்லறம் பழிபிறங் காதிருந் தில்லின்
கனமாந் தாளு துறையுந்
தகவது மிலாத தவறு ளோனே.

இதுவும், பயனுவமப்போலி. இதன்வேறுபாடுங் கண்டு கொள்க. பகுதி - இதுவமது. துறை - தோழி யியற்பழித் தல். பா - இதுவமது. 4

### நேரிசை யாசிரியப்பா.

நீர்நிலை முற்றலி னிடின்மலி சோலையுட்
கார்வழங் காத காலையுங் கவின்பெற
வேர்முதற் பழுத்த வியன்சினைப் பலவு
வளங்கெழு நாடெவம் மணிபுரை மாண்கவின்
புறந்தரு மாயினும் புனிதமொன் றின்றா
லரவணைத் துயிலமர்ந் தருளரங் கேசன்
றாநீர்க் காவிரித் துறைபடிந் தல்லதை
யொல்லே மலரம ளியினுறப்
புல்லேம் பரத்தையர் பொதுவுணின் மார்பே.

என்பது, மெய்யுவமப் போலி. பகுதி-இதுவமது. துறை—அணைந்தவழி யூடல். பா—இதுவமது. 5

### நேரிசை யாசிரியப்பா.

உலைவினி ரழுவத் துறுசிறை யவையி
னலைகொழித் தறைதொறு மறைதொறு மொத்
டழுங்கஞ் ரெய்திய வாக்கைய தாகியுந் [துண்

* செந்தேன் - என்றதின் முதலெழுத்துக் கெட்டிருக்கலாம்.

† "கு" என்றிருக்கலாம்.



தன்னுல் வளர்க்கத் தருசினை யதன்கண்
மன்னு தரவின் வயமீன் வைத்தகன்
வாங்கா துய்த்து வளர்புன லூரற்
கேவலிற் பிழையா வின்னிசைப் பாணர்
புதுவது வாய்வழி பிழைத்திவண் போதரு
மதுநினைந் தருவிருந் தளித்தற் கந்தோ
மதுமகிழ் மார்பினன் வழுதிநன் னாட்டவர்
குடிஞையைக் காய்திறற் குறிப்பது மின்றான்
மாதேர் மாணிழை மடவரல்
யாதோ கறியிங் கினிதமைப் பதுவே.

இதுவும், மெய்யுவமப் போலி, இதன் வேறுபாடுங் காண்க. பகுதி - இதுவமது. துறை - பாணனைப் பழித்தல். பா - இதுவமது. 6.

### நேரிசை யாசிரியப்பா.

பன்மலர் கஞலிய பழுமரச் சோலையுட்
டன்னிழ றணையாத் தளிர்த்தமொ வலின்மலர்
விரிகதிர் தெறுதலின் வெம்மையுற் றுணங்கா
முட்புறத் குடக்கனி முடப்பல வதனயற்
செங்கிடை மலர்கவின் சிறப்பவு நிழற்று
மொண்புன லூரற் குறுபழி வினைக்குபா
மேதில மேதில மெனலெங் கையர்மா
மனைப்பயின் மாணிழை மடவரன் *
மதராிக் கண்ணுப் மதங்கணுற் றிலனுற்
புவிப்பா வலர்தம் புரவலன் மதுர
கவிப்பா வலன்புகழ் கருணையங் கடலெனு
மதுமகிழ் மாலிகை மார்பினன் மயர்வறச்
சதுமறைப் பொருளாற் றருந்தமிழ் மறைத்துணி
வுரனுடை யோரி னுணர்ந்துயர் வறவுயர்
நலனுடை யிறைநிலை நவையறத் தெளிந்தோர்
பழிதீர் படிவம் பயின்றன ராகிக்
குணவத மிழந்த கூடா வொழுகின்
மனனது மலமிக மறுகுண
ரினமென லொன்றா யிகழ்மொய்ம் மையனே.

என்பது, உருவுவமப் போலி. பகுதி - இதுவமது. துறை - பாணனொடு வெகுளுதல், தோழிக்கூற்று. பா - இதுவமது. 7.

### நேரிசை யாசிரியப்பா.

ஒன்றாய்ப் பரந்த வுறுவளி கறங்கவின்
மின்றாழ் பன்மீன் மிளிர்விசும் புழுசினை
சுமைமலிந் தொசிதரத் துணர்த்தமென் பூமுகை
பொறிச்சுரும் புளர்தொறு முளர்தொறும் [பொதும்பருண்
முறுக்குடைந் திழிதரூஉ மொய்ந்நறுந் தேறல்
பரந்துபன் முகத்தவாய்ப் பவளக் கொடியொடுங்
குரூஉக்கட் பரூஉத்தாட் குடம்புரை செருத்தற்
கயவாய் மேதி கட்கழு நீருண்
டுபவால் வைந்நுதித் தொடர்நெறி மருப்பிற்
புறக்காழ் வயிரப் பூங்கழை தடிந்துகு
திறக்காழ் நித்தில நிரந்தரம் வரன்றயல்
வெள்ளிடை நிவந்த மேதகு சுவலினை
யுள்ளியிர்ப் பெடையை யுறையுளி விருத்திப்
பாலுணீர் தெரித்துப் பருகுமொண் சேவ
லாலுநீர்ச் சிறைபுக் காய்ந்திரை கொணர்வலென்
றிகந்தற லிடைப்படிந் தெழுமயர் வுயிர்ப்பான்
வாலுக வைப்பென் மறுகுபு குறுகிவீழ்ந்
தன்மையிற் றலக்குற் றச்சப் பார்வையிற்
புராதனப் பொய்கையுட் புகும்புன லூர
பொருவரு தாமரைப் புதல்வனைப் பயந்த
திருமறு மார்பினன் றிருவரங் கத்துட்
பொதுநலப் பெண்டிர் பொதுவுணின் மார்ப
மல்ல னீர்படிந் தல்லது
புல்லேந் தீண்டலெம் பொன்னடிப் போதே.

இதுவு முருவுவமப்போலி. இதன்வேறுபாடுங் காண்க. பகுதி - இதுவமது. துறை - அணைந்தவழியூடல். பா - இதுவமது. 8

### நேரிசை யாசிரியப்பா.

ஓங்கிய குரம்புசா ருவளக வயின்வயின்
வீங்கிய திணிதோண் மிடலுடை மள்ளர்
சுவைபெய் தாற்றலிற் சுடுமண் பன்முறை
ததைவுறப் படுத்த சால்பிற் றெண்ணீர்
வார்ந்துகு கவர்முழை மதகுபடர் குடுமியிற்
சேர்ந்தசை வறவிரு சிறகரு மொடுக்கி
மறைபுகு நோக்கின் மனப்பட் டிமையாற்
றுறைபுகு கயலினைச் சோர்புகண் டெடுத்துக்
கூர்வாய் வெண்சிறைக் குரண்ட மென்பெடைக்
கார்வா யெனவருத் தியினருத் துபுதுடித்
தயல்வீழ் வதனையாங் கற்றம் பார்த்து
மிச்சிலென் றறிந்தும் விழுநெறி யொரீஇ
நச்சியுண் புலவு நாற்றத் தோடுஞ்
செங்கால் வெள்ளுகிற் சேவ லோதிம
மொருசிறை யிருந்து வோவாச் செல்வி
யிருசிறைப் பொடையுறை யெழின்மலர் குறுகு
நளிமலர்ப் பொய்கை நல்வய லூர
திருநெடு மாயன் றிருவரங் கத்துப்
பொருணசைப் பரத்தையர் பொறித்தநின் மார்பிற்
றனக்குறி யாநிற் றழுவுபு சிதைவுறின்
மனக்கிட ரிழைப்பதும் மன்றி
நினைக்கிட ருறுமா னெருங்கலெம் மிடனே.

என்பது, பிறப்புவமப் போலி. பகுதி - இதுவமது. திணை - பெண்பாற் பெருந்திணை. துறை - பள்ளியிடத் தூடல். பா - இதுவமது. 9

* ஒருசீர் குறைகின்றது, "மையுண்" என்று சேர்க்கலாம்.

தனவணிகர் நாட்டிலிருக்கும் எமது நண்பர்களுக்குச் சென்ற ஆண்டு பைண்டு வால்யூம் தேவையாயிருக்குமாயின் அவர், விளம்பரவிலைக்குக் கோத்தமங்கலம் ஸ்ரீமான் இராமசுப்ரமணியம் செட்டியாரவர்களிடம் பெற்றுக்கொள்ளலாம். மானேஜர்.

# குலசேகரர்.

## திருநாளைப் போவார்.

**பாட்டிக் கதையின் பயன்.** குருபரம்பரை கூறும் கதையின் திரண்ட கருத்துத்தான் என்ன? முடிந்த முடிவுதான் என்ன! திருவரங்கம்சென்று பெரியபெருமாளைக் கண்டு உகக்கும் காதல் பெரிதுஉடையார் குலசேகரர் என்பதுஒன்று. பெருமாளை வழிபடுவதிலும், பெருமாளைவழிபடும் பெரியாரை வழிபடுவதே பெறற்கரிய பெரும் பேருகும் என்று ஆழ்வார் அறிந்து அதன்வழியே ஒழுகினர் என்பது இரண்டு. அவ்வடியார்கள் களவாடல் முதலிய களவாடல்களைக் கனவிலும்கருதாத கடவுட்டன்மை பெற்ற அறவோர் என்ற உறுதிப்பாடுடையார் ஆழ்வார் என்பது மூன்று. முகுந்தமாலையை முன்னிலையிலும், பெருமாள்திருமொழியைப் பின்னிலையிலும் அருள்வழி நின்று ஆழ்வார் அருளிச்செய்தார் என்பது நான்கு. இராமாயணத்திற் சிறந்த பெரியாரோடு கூடியிருந்து அதனை ஆராய்ந்து அறிந்தவர் என்பது ஐந்து. கதையினைப் படிக்கக் கேட்டபோதே கதையோடு ஒன்றுபட்டுநின்று அக்கதையானது தம்கண்ணெதிரே அப்போதுதான் நேரே நடப்பதுபோல விளக்கமாகக் காணும் உள்ளுணர்வு வாய்ந்தவர் குலசேகரர் என்பது ஆறு. அரசர்க்குரிய பெருஞ் செல்வத்தினையும் அருமை பாராட்டாது அனைத்தையும் துறந்து, உண்பதே உடுப்பதே உறங்குவதே உலகம் என் எண்ணித் திரியும் உலகினரோடு ஒன்ருக வாழ ஒருப்படாது, அவர்களை விட்டோடிப் பெருமாள்மேலேயே பித்தாகிக் கோயில்தோறும் கும்பிடச்சென்று இறைவனைக் கண்டு பாடி யாடி இன்புருவாகினர் என்பது ஏழு. குருபரம்பரையின் முடிவுரையானவை இவையே ஆகும். பாவலன் கட்டிய இந்த எழுநிலை மாடத்தைப் பழுதுபார்ப்பதே நமது வேலை. பழுதேனும் பார்ப்போம், பழுதில்லையாளுல், எழுநிலைமாடத் திருந்தா சாளுவோம்.

239 பக்கத் தொடர்ச்சி.

**கோயில்.** சிவனை வழிபடுவார் தில்லையைக் கோயில் என்றும் சிறப்பித்துப் பேசுவர். திருமாலை வழிபடுவோரோ, திருவரங்கத்தினை அவ்வாறே கோயில் என்று வேறொரு அடையும் இன்றி வழங்குவர். சிவனை வழிபடுவார் தில்லைக்குச் சென்று கோயிலில் ஆடும் கூத்தரசைக்கண்டு உகக்கும் காதல் கொண்டுள்ளார்கள். அங்ஙனமே, திருமாலை வழிபடுவாரும் கோயில்களுக்கெல்லாம் கோயிலாகிய திருவரங்கத்தை உயிருள்ளநாளில் ஒரு முறையேனும் சென்று கண்ணுரக் காணவேண்டும் என்று அதே கருத்தாய் இருக்கின்றார்கள். இவ்வெண்ணம் எல்லோருக்கும் பொதுவாக எழுந்தாலும், ஒரு சிலர்க்கே சிறப்பாகி விளங்குகின்றது. அவ்வொரு சிலர்க்கு இவ்வெண்ணம் பெரும்பித்தாகி முடிகின்றது. பித்தம் தெளியும் மருந்து பெரிய கோயிலில்தான் பெருகி வழிகின்றது. நாயன்மார்களில் அத்தகைய பித்துடையார் நந்தனர் ஆவர்.

"தில்லைக்கு நாளைக்குப் போக வேண்டும்"
"தில்லைக்கு நாளைக்குப் போக வேண்டும்"

என்று கனவிலும் கனவிலும் நாளும் கருதிவந்தார் ஆதலின் அவருக்குத் "திருநாளைப் போவார்" என்ற திருப்பெயர் வந்தது. அப் பெரியாரைப்போல ஆழ்வார்களிலே பெரியகோயில் பெரும்பித்துப் பிடித்தவர் குலசேகரரே ஆவர். ஒவ்வொருநாளும் திருவரங்கம் போகவேண்டும் என்று புறப்படுவாராம். ஆகவே இவரும் ஒரு திருநாளைப் போவாரே யாவர்.

**முதல் திருமொழி.** பெருமாள் திருமொழியில் முதல் திருமொழியாக விளங்குவது "இருளிரிய" என்று தொடங்குவதே யாகும். அத் திருமொழியில் ஒவ்வொரு பாடலிலும் முதல் மூன்றடிகளில் திருவரங்கத்தே பள்ளிகொண்டருளிய திருமாலின் நிலையை இப்போதே நம் கண்ணெதிரில் தோன்றுமாறு புனைந்துரைக்கின்றார். புலவரிற் பெரிய புலவராகிய நமது ஆழ்வார் நாலாம் அடியிலே அத்தகைய பெருமாளை "என்று காண்பது", "என்று வழிபடுவது" என்று இரங்கி ஏங்குகின்றார். இவரது உள்ளுணர்வைப்பற்றி ஆராயும்போது முதல் மூன்றடிகளை முழுதும் ஆராய்வோம். இங்கு நமக்கு வேண்டுவது நாலாம் அடியேயாகும். ஆனால் பொருளினைத் தொடர்ச்சியாக அறியவேண்டி முழுப்பாட்டினையும் எழுதுகின்றோம். ஒருவரும் அறியாதபடி ஒருவன் ஒருத்தியைக் காதலித்து வருவானுனல், அவளைக் காண எவ்வளவு ஆவலோடும் விரைந்துசெல்ல எண்ணுவானே, அவ்வளவு ஆவலோடும் விரைவோடும் பதைபதைக்கின்றார் இவ்வாழ்வார். அக்காதலன், அக்காதலியைப் பற்றியும், அக்காதலிக்கு அன்பினராய் உள்ளாரைப்பற்றியும், எண்ணியெண்ணி ஏங்கி நின்று "எந்நாள் அவரைக் காண்பேன்; எந்நாள் அவரைப் புகழ்வேன். எந்நாள் அவர்களுக்கு வேண்டிய மணியும் மலரும் புனைந்து சூட்டுவேன். கன்மனக் கொடியேனுதலின் காதலியைப் பிரிந்தும், மனம் கலங்காது கண்ணில்நீர் கலங்காது நிற்கின்றேன்? புரண்டுருளாது பொய்யனுப் பொலிகின்றேன். காதலியோடு ஒன்ருகி வாழும்நாள் எந்நாளோ!" என்று புலம்புவதுபோல ஆழ்வாரும் புலம்பி நிற்கின்றார்.

இருள் இரியச் சுடர்மணிகள் இமைக்கும் நெற்றி
  இனத்துத்தி அணிபணம் ஆயிரங்கள் ஆர்ந்த
அரவரசப் பெருஞ்சோதி அநந்தன் என்னும்
  அணிவிளங்கும் உயர்வெள்ளை அணையை மேவி
திருவரங்கப் பெருநகருள் தெண்ணீர்ப் பொன்னி
  திரைக்கையால் அடிவருடப் பள்ளி கொள்ளும்
கருமணியைக் கோமளத்தைக் கண்டு கொண்டுஎன்
  கண்ணிணைகள் என்றுகொலோ களிக்கும் நாளே.

[இரிய - சிதறிநீங்க; இமைக்கும் - விட்டுவிட்டு விளங்கும்; துத்தி - நல்லபாம்பு படம் எடுத்தாடும் போது அதில் திருமண்போல் தோன்றும் குறி; பணம் - படம்; அரவு அரசு - பாம்புக்கெல்லாம் அரசு; அணை - படுக்கை; மேவி - பொருந்தி; தெள் நீர் - தெளிவான நீர்; பொன்னி -காவிரி; கோமளம் - அழகு]

" அடியேனுடைய கண்கள்இரண்டும் எந்த நாளில் இன்பத்தை யடையப் போகின்றனை. இன்பத்தைத் தரும் காட்சியை யான் என்று காணப்போகின்றேன். அழகினைக் கண்டன்றோ கண்கள் களிக்கின்றன?



அழகுக்கெல்லாம் அழகாகி அழகினுக்கே அழகு செய்யும் ஆரழகை என்று காண்பேன். கதிரவனொளி போன்று கண்ணைக் குருடாக்கும், அழகோ அவ்வழகு? அன்றன்று, அரவின் மணியினும் (மாணிக்கம்) உயர்ந்து ஒளிர்வது; ஆனல் கண்டாரது கண்ணும் கருத்தும் குளிர்ந்து இன்பம்பெருமாறு கருநிறத் தோடேநம் கண்ணுக்ககப்படுவதோர் அழகன்றோ அவ்வழகு. அழகியஉருவமும் அழகியவடிவமும் சினந்து நின்று போராடும்போது அழகிலாதவாய் அழிந்தொழிகின்றன. அங்ஙனமே சோம்பிநின்று தூங்கும் நிலையில் அவ்விடத்தில் திருமகளின் திருவுருவாகிய அழகினைக் காண்கின்றிலோம். திருமகளின் தமக்கையாராகிய பெரியம்மாளே பேரோலமிடக் காண்கின்ரேம் ஆனல் எனது கருமணியாகிய கோமளம் எந்த நிலையில் உள்ளது. போரிடு நிலையிலும் ராஜஸம்) இல்லை. தூங்கிடு நிலையிலும் (தாமஸம்) இல்லை. நடு நிலையிலே (ஸத்வம்) நின்று, அறிதுயில் அமர்ந்து அன்பொடு (கருமை) பயின்ற அறிவுருவாக (மணி) ஒளிர்கின்றது. அவ்வாறு அறிதுயிலமர்ந்த இடமே இயற்கை அன்னை இன்பக்கூத்தாடும் இடமாகும். பொன்னியாருனது பனிநீர்போல் தெளிந்தோடுகின்றது அதனிடையே அழகிய திருவரங்கப் பெருநகருள் பள்ளிகொண்டுள்ளார் பெருமான். இப்பொன்னியானது சிறிய அலைகளாகிய கையினலே அவரது திருவடியிலே மோதி அவரது காலைப்பிடித்து மெல்ல வருடுகின்றது. அடிவருடும் அருமை அவ்வாருனல் அவர் பள்ளிகொள்ளும் படுக்கைதான் என்ன? கருமணி நன்கு விளங்குவதற்காக வெண்மணியினிடையே பதித்ததுபோலக் கரியபெருமாள் வெள்ளையணைமேல் விளங்குகின்றார். எத்தகைய அணையினும் காற்றடைத்த பையே சிறந்ததாகும். அத்தகையதே பாம்பு. அப்பாம்புகளிற் சிறந்ததாய், அவற்றிற் கெல்லாம் அரசாய் விளங்கும் அநந்தனன்றோ அழகிய ஆண்டவனுக்கு அணையாய் அமைந்தான். அவ்வணையும் உயர்ந்தே நின்று ஆண்டவனுக்கு இன்பமூட்டுகின்றது. கருமணிக் கேற்றவாறு அவரது அணையும் பேரொளிப் பிழம்பாக நிற்கின்றது. அழகிய படங்களை விரித்து நிற்கின்றது. அப்படங்கள் ஒவ்வொன்றிலும் இனம் இனமாய் இணைந்து நிற்கும் திருமண்காப்பு, அவை எல்லாம் ஆண்டவனது பொருளேஎன்பதை விளக்கி நிற்கின்றன. அப்படங்களின் அவ்வாயிர நெற்றியிலும் தீப்போல் சுடர்விடும் அரவுமணிகள் விளங்கி, அங்கிருக்கும் இருட்டையெல்லாம் ஓட்டி இறைவன் திருவுருவை எல்லோருக்கும் இனிதே காட்ட விளக்குப் பிடித்து நிற்கின்றன. இவ்வழகினை என்றம்போய்க் கண்டு என்னுடைய கண்கள் களிக்கப் போகின்றனவோ?" என்கின்றார் ஆழ்வார்

கண்ணுரக் கண்ட பின்னர்க் களிப்பிற்குப் போக்குவீடாக வாயார வாழ்த்தவேண்டாமா? அதனை என்று செய்வேன் என்கின்றார் ஆழ்வார்.

வாய்ஓர் ஈரைஞ்ஞூறு துதங்கள் ஆர்ந்த
  வளை உடம்பின் அழல்நாகம் உமிழ்ந்த செந்தீ
வீயாத மலர்ச்சென்னி விதானமேபோல்
  மேன்மேலும் மிகஎங்கும் பரந்த தன்கீழ்
காயாம்பூ மலர்ப்பிறங்கல் அன்னமாலைக்
  கடியரங்கத் தரவணையிற் பள்ளி கொள்ளும்
மாயோனை மணத்தூணே பற்றி நின்றுஎன்
  வாயார என்றுகொலோ வாழ்த்து நாளே.

[துதம் - ஸ்துதி போற்றுதல், அல்லது துத்தி; வீயாத - கெடாத; சென்னி - திருமுடி; விதானம் - மேற்பரப்பு; பிறங்கல் - மாலை; மாலை - திருமாலை; கடி - காவல் அமைந்த; வளை - வளைந்த, அல்லது வளை (சங்கு) போல் வெளுத்த]

பூவினைத் தொடினும் ஊற்றின்பம் பெற்று மயிர்க்கூச்செறிந்து மகிழ்கின்றோம். மெல்லியவற்றில் எல்லாம் மெல்லியவனுன பெருமாளைத் தாங்கும் பெரும் பேறுடைய அரவரசன் அடைந்த இன்பப்பெருக்கினை எவ்வாறு எடுத்துரைப்பது. அவ்வின்பத்தை உள்ளத்துள்ளேயே அடக்கிவைக்க மாட்டாதவனுப் அவ்வரவரசன் தனது ஓராயிரம் வாயையும்கொண்டு ஆண்டவனை ஏத்தி வழிபடுகின்றான். அன்பினது மேலீட்டினல் பகையில்லாத இடத்தும் பகைவருமோ என அழன்று சீறி நிற்பவன். அவன் கக்கும் நஞ்சம் செந்தீயாய்த் திகழ்கின்றது. இடைவிடாதே அவன் உமிழ்கின்ற இத்தீச்சுடர் இவரது படுக்கையின்மேல் இட்ட மேற்கட்டிபோல, மேலெங்கும் சுற்றிலும் பரந்து பேரொளிப் படாமாக மேலே அகன்று விளங்குகின்றது. இவ்வாறு பெருமாளது திருமுடிமேல் விளங்கினுலும், இவரது திருமுடியில் அணிந்துள்ள மலர் ஒன்றேனும் இத்தீயால் கருகியதில்லை. அழியா இடத்தை அடைந்தவர் அழிவதும் உண்டோ? இத்தகைய அரவரசனல் காவல் காக்கப்பட்ட திருவரங்கத்தினும் காவல் மிக்க ஊரும் வேறொன்றும் உண்டோ? காயாம்பூவால் கட்டப்பட்ட மாலைபோல, அழகோடும் மென்மையோடும் விளங்கிப் பொலிந்து வெள்ளிய அரவின்மேலே பள்ளிக்கொள்ளும் திருமாலோ கண்மயக்கம் செய்து களிப்பூட்டும் கள்வனுதலின் அவனழகைக்கண்டு தம்மை மறவாதிருப்பார் உலகில் ஒருவரும் இல்லை. அவனது கடவுள்திருவுருவின் திருமணமே உருப்பெற்று நம்மெதிரே நம் கைக்கோர் ஊன்றுகோலாய் இரண்டு தூண்கள் என வடிவங்கொண்டு விளங்குகின்றன. அவனது வடிவழகில் ஆழ்ந்தவர்கள் இதனையே புணையாகப்பற்றி அவனைக்கண்டு களித்தல்வேண்டும். அவன் அழகு இருந்தபடி அவ்வாறன்றே? ஊற்றின்பம் பெற்று அரவரசன் வாயார வாழ்த்துவதுபோலக் கண்ணின்பம் பெற்ற நான், அழகிலே அகப்பட்ட ஆர்வத்தாலே தள்ளுண்ணுமே இரண்டு தூண்களையும் பற்றி நின்று, கண்ட களிப்பினுக்குப் போக்குவீடாக வாயார வாழ்த்தாமல் இருத்தலும் இயலுமோ? அவ்வாறு யான் வாழ்த்து நாள் எனக்கு எப்பொழுது வாய்க்குமோ" என்கின்றார் இப்பாட்டில்.

இவ்வாறுசெய்யாதவரையில் நமது கண்ணும் கண்ணே? வாயும் வாயோ? என்பது இதனுல் போதருகின்றது.

பெரியவனை மாயவனைப் பேர்உலகம் எல்லாம்
விரிகமல உந்தியுடை விண்ணவனைக் கண்ணும்
திருவடியும் கையும் கனிவாயும் செய்ய
கரியவனைக் காணுத கண்ணென்ன கண்ணே!
கண்ணிமைத்துக் காண்பார்தம் கண்என்ன கண்ணே!

என்றும்,

மடந்தாழும் நெஞ்சத்துக் கஞ்சனர் வஞ்சம்
கடந்தானை நாற்றிசையும் தேவர்களும் போற்றத்
தொடர்ந்தாரண முழங்கப் பஞ்சவர்க்கு தூற்றுவர்பால்
நடந்தானை ஏத்தாத நாவென்ன நாவோ (தூது
நாராயணு என்னு நாவென்ன நாவோ.

என்றும், குலசேகரர் பிறந்த சேரநாட்டிலே சேரர் குடியிலே பிறந்த இளங்கோவடிகள் தமது சிலப்பதிகாரத்தில் பாடியுள்ளதனை நமது ஆழ்வார் படியாதிருந்திரார். இவ்விரண்டு பாடல்களின் எதிர் ஒலியை முன்னெடுத்து விளக்கிய பெருமாள்திருமொழியில் கேட்கின்றோம். ஆனல் அவர் பாட்டுக்கும் இவர் பாட்டுக்கும் என்ன வேற்றுமை, என்ன வேற்றுமை!

# தமிழ்ப் பாடம் 68.

## [நளவெண்பா.]

### கலி நீங்கு காண்டம்.

**த**ன் நாயகன்தானே இவ்வாகுகன் என்பதைப் பின்னும் சோதித் தறியும்பொருட்டுத் தமயந்தி செய்த சூழ்ச்சியால் அருகணைந்த மக்களைக் கண்ட நளன், ஆர்வத்தோடு அவர்களுடன் உசாவிய அழகை இனிவரும் சில செய்யுள்களிற் காண்கின்றோம். அருமையான வொரு நாடகநிலையைப் புகழேந்தி இங்கு மிக்க திறமையோடு கையாண்டிருக்கின்றார்.

மக்களைமுன் காணு மனநடுங்கா வெய்துயிராப்
புக்கெடுத்து வீரப் புயத்தணையா—மக்காணீர்
என்மக்கள் போல்கின்றீர் யார்மக்க ளென்றுரைத்[தான்
வன்மக் களியானை மன். 58

பதப்பிரிவு:—மக்களை முன் காணு மனம் நடுங்கா வெய்து உயிராபுக்கு எடுத்து வீரம் புயத்து அணையா மக்காள் நீர் என்மக்கள் போல்கின்றீர் யார் மக்கள் என்று உரைத்தான் வன்மம் களி யானை மன்.

பதவுரை.

வன்மம்-க்ஷாத்திரம் மிகுந்த
களி-மதங்கொண்ட
யானை-யானைகளை உடைய
மன்-மன்னனாகிய நளன்,
மக்களை-(தன்னுடைய) மக்களை
முன்-எதிரே
காணு - கண்டு,
மனம் - மனமானது
நடுங்கா - நடுங்கி,
வெய்து - வெப்பமாக
உயிரா - பெருமூச்சு விட்டு,
புக்கு - புகுந்து
எடுத்து - எடுத்து (தன்)
வீரம் - வீரம் மிகுந்த
புயத்து - தோள்களில்
அணையா - அணைத்து,
"மக்காள் - மக்களே,
நீர் - நீங்கள்
என் - என்னுடைய
மக்கள் - மக்களை
போல்கின்றீர் - போல இருக்கின்றீர்,
யார் - யாருடைய
மக்கள் - பிள்ளைகள்?"
என்று - என்று
உரைத்தான் - சொன்னான்.

விரிவுரை:—மக்களைக் கண்டவுடன் நளனுடைய மனம் பதைத்துருகிக் குழம்பிப்போ யிருக்கவேண்டும். இல்லையெனில் தேர்ப்பாகனை நடிக்கின்ற ஒருவன் அரசமக்களை எடுத்துத் தன் மார்போடணைத்துக் கொள்ளத் துணிந்திருக்கமாட்டான். செய்கை இவ்விதம் தடுமாறியதல்லாது அவன் சொற்களுந் தடுமாறுகின்றன. பாகனாயிருக்குமவன் தன்னைத்தானுமறியாமல் மன்னர்குல மக்களை நோக்கி "என்மக்கள் போல்கின்றீர்" என்று கூறிவிட்டான். இவ்வாறு கூறுவது தக்கது அன்றென அவனுக்கே பட்டிருக்கவேண்டும். ஆகையால், "யார் மக்கள்?" என்று விரைந்து வினவலாயினன். இப்படிக்கு அன்றி, "மக்காள் நீர் யார் மக்கள்" என்று மட்டுமே நளன் மக்களை நோக்கி வினவியதாகக் கொள்வதும் பொருந்தும். "என் மக்கள் போல்கின்றீர்" என்ற சொற்களை நளன் இடையிலே, அவர் செவியிற் படாமல் தனக்குள்ளேயே மெள்ளச் சொல்லிக்கொண் டிருக்கலாம். ஒரு பிள்ளையைப் பார்த்து ஒருவன், "பிள்ளாய், உன்னைப் பார்த்தால் என்னுடைய மகன்மாதிரி யிருக்கின்றது; நீ யாருடைய பிள்ளை" என்று கேட்பது சிறிது ஒழுங்கிற்கு விரோதமாகக் காண்கின்றது பலகாலம் பிரிந்திருந்த குழந்தைகளைப் பார்த்த ஆர்வத்தால் நளன் இப்படிக் கூறிவிட்டான் என்று எண்ணுவது பொருந்துமாயினும், "என் மக்கள் போல்கின்றீர்" என்னும் சொற்களை அம்மக்களுக்கு விளம்பாது தனக்குள்ளே சொல்லிக்கொண்டான் என்ற பொருள் சிறிதுசிறந்து நிற்கின்றது.

மன்ன னிடதத்தார் வாழ்வேந்தன் மக்கள்யாம்
அன்னை தனைக் கான்விட் டவனேக—இந்நகர்க்கே
வாழ்கின்றோ மெங்கள் வளநாடு மற்றொருவன்
ஆள்கின்றா னென்றா ரழுது. 59

பதப்பிரிவு:—மன்னன் நிடதத்தார் வாழ் வேந்தன் மக்கள் யாம் அன்னை தனை கான் விட்டு அவன் ஏக இ நகர்க்கே வாழ்கின்றோம் எங்கள் வளநாடும் மற்று ஒருவன் ஆள்கின்றான் என்றார் அழுது.

பதவுரை.

"யாம் - நாங்கள்,
நிடதத்தார் - நிடத தேசத்தவர்களுக்கு
மன்னன் - மன்னனுடைய
மக்கள் - பிள்ளைகள்.
(வாழ் - வாழ்கின்ற
வேந்தன் - அரசன் அவன்)
அன்னை தனை - எங்களுடைய தாயை
கான் - காட்டில்
விட்டு - விட்டுவிட்டு
அவன் - அம்மன்னன்
ஏக - போய்விட்டதால்
இ - இந்த
நகர்க்கே - நகரத்திலேயே
வாழ்கின்றோம் - வசித்துவருகின்றோம்.
எங்கள் - எங்களுடைய
வளம் - வளப்பம்பொருந்திய
நாடும் - நாட்டையும்
மற்றொருவன் - வேறொருவன்
ஆள்கின்றான் - ஆள்கின்றான்"
என்றார் அழுது - என்று அழுதார், (அம்மக்கள்)

விரிவுரை:—'வாழ் வேந்தன்' என்பது, அம்மக்கள் தம் வாசகத்தினிடையே தந்தையின் நினைவை வாழ்த்துவதால் வந்தது. "எங்கள் தந்தை எந்த நிலையிலிருந்தாலும், என்ன காரியம் செய்தாலும், கேடு அடைந்தவன் ஆகமாட்டான்" என்பது அச்சொற்களின் குறிப்பாகும். "எங்கிருப்பினும் எம் தந்தை வாழ்க" என அச்சிறுவர் வழுத்துகின்றனர்.



மக்கள் இருவரும் ஒரேவிதமாக ஒரே சொற்களைச் சொல்லியிருத்தல் இயற்கையன்று. ஆகலின், "மன்னன்நிடதத்தார் வாழ்வேந்தன் மக்கள் யாம், அன்னை தனைக் கான்விட்டு அவன் ஏக இந்நகர்க்கே வாழ்கின்றோம்" என்றவரையில் இந்திரசேனை சொன்னதாகவும், அதனைத் தொடர்ந்து "எங்கள் வளநாடும் இன்னொருவன் ஆள்கின்றான்" என்று இந்திரசேனன் கூறி முடித்ததாகவும் கொள்ளலாம்.

இந்த இந்திரசேனனும் இந்திரசேனையும் சொல்கின்றபடியால் தம் பிள்ளைமதியின் இயற்கையைநன்றுகக் காட்டுகின்றனர். நளன் கேட்டது, "நீங்கள் யார் மக்கள்" என்பதுதான். அதுவரையில் இன்னார் மக்கள் என்பதைமாத்திரம் உரைப்பதுபோகத், தமது அன்னையை அவன் காட்டில் விட்டுப்போனதும் தங்கள் வளநாட்டை இன்னொருவன் ஆள்வதும் யாவும் கூறிவிடலாயினர். வயது சிறிது ஆனவர்களாயின் அயலானொருவனிடத்தில் தமது தாழ்மையை இவ்விதம் சொல்லிக்கொள்ள மாட்டார். தம்மிடம் சிறிது தாபம் காட்டுகின்றவர்களைக்கண்டால், சிறுபிள்ளைகள் அவர்களிடத்தில் எல்லாவற்றையும் இயம்பிவிடுவது இயல்பு. அதுவுமன்றிச் சிறுவர்களாவார் உரைக்கவேண்டியது எது, மறைக்கவேண்டியதுஎது, என்பது ஓராமல், அயலார் முன்னிலையில் அவமானத்திற்கிடமானவைகளைச் சொல்லிவிடுவதும் உலக அநுபவம்.

ஆங்கவர் சொன்ன வுரைக்கேட் டழிவெய்தி
நீங்கா வுயிரோடு நின்றிட்டான்—பூங்காவில்
வள்ளம்போற் கோங்கு மலரும் திருநாடன்
உள்ளம்போற் கண்ணீ ருகுத்து 60.

கருத்து:—மக்களது உரைகேட்ட நளன், மனம் உருகிக் கண்ணீர் சொரிந்து நின்றான்.

## இலக்கணம்

வாக்கியத்திலுள்ள வார்த்தைகள் ஒன்றை ஒன்று தொடர்கின்றபோது, அவ்வாறு தொடர்கின்ற நிலைமொழி வருமொழி என்னும் இரண்டு வார்த்தைகளுக்கிடையே ஏதேனும் தொக்கு இருக்குமாயின், அவ்விரண்டு வார்த்தைகளும் சேர்ந்து ஆன அந்தச்சொற்றொடரை தொகைநிலைத் தொடரென்றும்; அவைகளுக்கிடையே யாதொன்றும் தொக்கு இராதாயின், அதனைத் தொகாநிலைத் தொடர் என்றும் கூறுவார்.

இத் தொகாநிலைத்தொடர்கள் (அடுக்குத் தொடரைத் தவிர) நிலைமொழிகளைக் கருதி ஒன்பது வகைப்படுகின்றன. நிலைமொழி பெயர்ச்சொல்லாக இருக்கலாம், அல்லது வினைச்சொல்லாக இருக்கலாம், அல்லது இடைச்சொல்லாக இருக்கலாம், அல்லது உரிச்சொல்லாக இருக்கலாம்.

பெயர்ச்சொல்லா யிருக்குமாயின் அது என்ன வேற்றுமை என்பதைப் பார்க்கவேண்டும்.

இராமன் வந்தான், என்னும் வாக்கியத்தில் இராமன் என்ற நிலைமொழி முதல்வேற்றுமைப் பெயர்ச்சொல். முதல் வேற்றுமையிலிருக்கின்ற சொற்களே எழுவாயாக வரக்கூடும். இங்கு நிலைமொழி எழுவாய் இருத்தலால், இராமன் வந்தான் என்னும் அவ்விரண்டு வார்த்தைகளும் சேர்ந்தது எழுவாய்த்தொடர். அப்படியே, கோழி கூவியது, மரங்கள் வளர்ந்தன, முதலியன எழுவாய்த் தொடர்கள். நிலைமொழி முதல் வேற்றுமைப் பெயர்ச்சொல்லாக வருகின்ற தொடர்களை முதல்வேற்றுமைத் தொகாநிலைத்தொடர் என அழைக்கின்ற வழக்க மில்லை; எழுவாய்த்தொடர் என்றே கூறுவார். அவ்விதமே நிலைமொழிப் பெயர்ச்சொல் எட்டாம்வேற்றுமையில் இருக்குமானால், அத்தொடரை விளித்தொடர் என்று சொல்வார்; எட்டாம்வேற்றுமைத் தொகாநிலைத்தொடர் என்று சொல்வதில்லை. அண்ணா, வா. மாதர்காள் எங்குப்போகின்றீர். மக்காள் நீர்; என்பவைகளில் நிலைமொழிகள் எட்டாம் வேற்றுமையில் இருந்து கூப்பிடப்படுகின்ற பொருளைத் தருகின்றன. விளித்தல் என்றாலும் கூப்பிடுதல் என்றாலும் ஒரே அர்த்தந்தான் ஆதலால், முதல் வேற்றுமையை, எழுவாய் என்பதுபோல், எட்டாம் வேற்றுமையை விளி என்று கூறுவார். எனவே நிலைமொழி எட்டாம்வேற்றுமைப் பெயர்ச்சொல்லாகி நடக்கின்ற தொடர், விளித்தொடர்.

எட்டு வேற்றுமைகளில் இவ்விரண்டும் இவ்வாறு போக, நிலைமொழி, இரண்டுமுதல் எழுவரையில், உள்ள ஆறுவகை வேற்றுமைகளில் ஏதேனும் ஒன்றை அடைந்து அவ்வேற்றுமைக்குரிய உருபும் மறையாமல் விரிந்தும் இருக்குமானால், அப்பொழுது அத்தொடர்களை வேற்றுமைத் தொகாநிலைத் தொடர்கள் என்று அழைப்போம். அதுவன்றி நிலைமொழி எவ்வெவ் வேற்றுமை உருபுபெற்று நிற்கின்றதோ, அவ்வவ்வேற்றுமையின் பேரையும் சேர்த்து, இரண்டாம் வேற்றுமைத் தொகாநிலைத்தொடர், மூன்றாம் வேற்றுமைத் தொகாநிலைத்தொடர், நான்காம், ஐந்தாம், ஆறாம், ஏழாம் வேற்றுமைத் தொகாநிலைத்தொடர்கள் என்றும் சொல்வதுண்டு.

உதாரணங்கள்:—

குதிரையையோட்டினான்:—இரண்டாம் வேற்றுமைத் தொகாநிலைத்தொடர்.
கத்தியால் வெட்டினான் :—மூன்றாம் வேற்றுமைத் தொகாநிலைத்தொடர்.
எனக்குக் கொடுத்தான் :—நான்காம் வேற்றுமைத் தொகாநிலைத்தொடர்.
மலையின் இறங்கினான் :—ஐந்தாம் வேற்றுமைத் தொகாநிலைத்தொடர்.
இராமனது வில் :—ஆறாம் வேற்றுமைத் தொகாநிலைத்தொடர்.
வீட்டில் இருந்தான் :—ஏழாம்வேற்றுமைத் தொகாநிலைத்தொடர்.

இவைகளிலெல்லாம் வேற்றுமை உருபு மறையாமல் விரிந்து வந்திருக்கின்றன.

ஆதலின், தொகாநிலைத்தொடர்களில் நிலைமொழி பெயர்ச்சொல்லா யிருக்குமானால் அத்தொடர், எழுவாய்த்தொடராகவாவது விளித்தொடராகவாவது அல்லது இரண்டுமுதல் ஆறுவரையிலுள்ள வேற்றுமைகளில் எதாவது ஒரு வேற்றுமைத் தொடராகவாவது இருக்கலாம் இன்னதொடர் இது என்று அறிவதற்கு நிலைமொழியைத்தான் கவனிக்கவேண்டும்; வருமொழியைப்பற்றிக் கருத வேண்டியதே யில்லை.

இனி, நிலைமொழி வினைச்சொல்லாயிருக்கலாம். வினைச்சொல், வினைமுற்று என்றும் வினையெச்சம் என்றும் பெயரெச்சம் என்றும் மூன்று வகைப்படுவதை முன்னரே கற்றிருக்கின்றீர்.

நிலைமொழி, வந்தான் இராமன், இருண்டன திசைகள். வா இராமா, என்பனபோல் வினை முற்றாயிருக்

குமாயின் அத்தொடர் வினைமுற்றுத்தோடர் ஆகும்.

நிலைமொழி, ஓடி வந்தான். சென்று பார்த்தான். காண்பான் நின்றேன். என்பனபோல் வினையெச்சமாயிருக்குமாயின், அத்தொடர் வினையெச்சத்தோடர், ஆகும்.

நிலைமொழி, பெய்த மழை, உண்ட சோறு, ஓடிய குதிரை, என்பனபோன்று பெயரெச்சமாயிருக்குமாயின், அத்தொடர் பெயரேச்சத்தோடர் ஆகும்.

எனின், தொகாநிலைத்தொடர்களில் நிலைமொழி வினைச் சொல்லாயிருக்குமாறல், அத்தொடர் வினைமுற்றுத் தொடராகவாவது, வினையெச்சத் தொடராகவாவது பெயரெச்சத்தொடராகவாவது இருக்கலாம்.

இனி, நிலைமொழி இடைச்சொல்லாக இருக்குமாயின் (இடைச்சொல் இன்னதென்பதையும் அதன் இலக்கணத்தையும் முன் சிறிது கற்றிருக்கின்றீர்) அத்தொடர் இடைச்சோற்றேடர் எனப்படும். உதாரணம்:—மற்று ஒன்று. யாதுகோல் பெயர்.

உரிச்சொல்லைப்பற்றி இப்பாடங்களில் இதுவரையில் ஒன்றும் சொன்னதில்லை நனி தவ என்பன போன்ற சில உரிச்சொற்கள் தமிழில் இருக்கின்றன. இவைகளில் ஒன்று, நனி சிறினன், என்பதுபோல் நிலைமொழியா யிருக்குமாயின், அத்தொடர் உரிச்சோற்றேடர், ஆகும்

பாம்பு பாம்பு, ஓடு ஓடு, குழந்தை குழந்தை, என்பனபோல் விரைவுபற்றி ஒரு வார்த்தையை இரண்டு தரம் அடுக்கிச் சொல்வதுண்டு. அப்படி அடுக்கி வருமாயின் அத்தொடர் அடுக்குத்தோடர் ஆகும்.

# கம்ப ராமாயணம்

## பாலகாண்டம்

### 11. குலமுறை கிளத்து படலம்

பழியினிற் கஞ்சிய விழுமிய னிராமன்.

அரசியற் படலத்தின்கண் அமைந்திருந்த வாய்மைகள் யாவற்றையும் பாசுரம் ஒன்றினில் அடக்கிய கோசிகனைத் திருவவதாரப்படலத்துச் செய்திகளையும் பத்து செய்யுள்களுக்குள் கூறும்படி கம்பர் விதித்தனர். இவ்விதிக்கிணங்கி இங்குச் சுருங்கக்கூறுவது தன்கடனென்றுணர்ந்தானை

295 பக்கத் தொடர்ச்சி

னும் விச்வாமித்திரன், மகவின்றி வருந்திய தயரதன்,

> சிலைக்கோட்டு நுதற்குதலைச்
> செங்கனிவாய்க் கருநெடுங்கண்
> விலைக்கோட்டும் பேரல்குன்
> மின்னுடங்கு மிடையாரை
> முலைக்கோட்டு விலங்கென்றங்
> குடனணுகி முன்னின்ற
> கலைக்கோட்டுப் பெயர்முனியாற்
> றுயர்நீங்கக் கருதினன்

[வில்லைப்போல் வளைந்த நெற்றியையும், குதலைச் சொற்களோடு கூடிய சிவந்த கொவ்வைக் கனிபோன்ற வாயையும், கரிய பெரிய கண்களையும், விலைக்காக வியாபாரம் நடத்துகின்ற பெரிய அல்குலையும், மின்னலைப்போல் துவளும் இடையையும் உடைய கணிகையரை, முலைகளைக் கொம்பாக வுடைய மிருகங்களென்றெண்ணி அவர்களோடு வந்து உரோமபதனுக்கு எதிர்நின்ற கலைக்கோட்டு முனிவனால், தன்னுடைய குறையை நீக்கிக்கொள்ளக் கருதினன்]

என்று மேல்நிகழ்ந்ததைக் கூறத் தொடங்குகையில், சகத்துளோர் தன்மை தேராக் கலைக்கோட்டு மாமுனியைக் காட்டினின்று வஞ்சித்து உரோமபதநாட்டிற்கு அழைத்து வந்த கணிகைமாதரின் அவயவஅழகையும் தொழிற்குரிய முறையையும் வாயாரச் சொல்லாதகலமனங்கொண்டிலன் இங்குக்கணிகையர்வருணனைக்குக் கோசிக முனிவன் உரிமையாக்கிய சொற்றொடர்களின் அளவுஇனிமையும் நயமும் வாய்ந்த செய்யுள்கள்தமிழ் இலக்கியங்களுள் வேறு இருப்பன மிகச் சில. உள்ளத்திலனுபவிக்கின்ற ஒன்றினைப் பொங்கிய உணர்ச்சியோடு பொழிகின்ற காலத்திலல்லாது அவ்வாசகம் மதுரமொழிகளால் அமைவது அருமை. எனின், இத்துணை இனிமையாய்க் கணிகையர் அணிநலம் பரவிய கோசிகன் தன் நினைவினின்று முன்னாள் தவத்திடை தோன்றி மையல் மூட்டிய மேனகையின் படிவந்தான் முற்றிலுங் கலைந்ததில்லையோ என்றவோர் ஐயுறவு அம்முனிவன்பால் எய்துவதன்முன், மேனாள் இச்செய்தியைத் தயரதனுக் குரைத்த வசிட்டனும்,

> "சோதிநுதற் கருநெடுங்கண் துவரிதழ்வாய்த்
> தரளநகைத் துணைமென்கொங்கை மாதர்,"

என்றக் கணிகையரை வருணித்திருப்பதையும், அவர்களை ஏவிய உரோமபதவேந்தன்,

> "பனிப்பிறையைப்
> பழித்தநுதற் பணைத்தவேய்த்தோள்
> எங்குமிடைத் தடித்தமுலை யிருண்டகுழல்
> மருண்டவிழி யிலவச்செவ்வாய்ப்
> பூங்கொடியீர்"

என்று அழைத்திருப்பதையும் மறவாது கருதுதல் வேண்டும். அருந்ததிகணவன் என்றும் கணிகையர் உறவு கொண்டவ னல்லன். கலைக்கோட்டு முனியை மயக்காமுன்னம் தானே அப்பூங்கொடியர்பால்மயங்கி உரோமபதவரசனும் நின்றிலன். எப்பொருளில், யார்மாட்டுத் தோன்றியதேனும் அழகெனும் தோற்றத்தில் ஈடுபட்டவோர் உள்ளத்தின் கிளர்ச்சியால் கிளத்திய மொழிகள் அவை. கோசிகன் உரையும் அன்னதே.

கலைக்கோட்டுமுனிவனிடந் தயரதன் தன் குறையைக் கூறிக்கொண்ட தன்மையை,

> தார்காத்த நறுங்குஞ்சித் தநயர்களென் றவமின்மை
> வார்காத்த வனமுலையார் மணிவயிறு வாய்த்திலரால்
> நீர்காத்த கடல்காத்த நிலங்காத்தே னென்னிற்பின்
> பார்காத்தற் குரியாரைப் பணிநீயென் றடிபணிந்தான்.

[என்னுடைய தவக்குறைவினால், வார்க்கச்சுக் கட்டிய முலைகளுடைய என் மனைவியர்களது அழகிய வயிற்றில், பூமாலைசூடிய வாசனைபொருந்திய சிகையையுடைய புத்திரர்கள் தோன்றவில்லை. நீர் தங்கிய கடல்சூழ்ந்த இவ்வுலகைக் காத்தேன். எனக்குப்பின் இப்பூமியைக் காப்பதற்குத் தகுந்தவரை நீ அளிக்கவேண்டும், எனத் தயரதன் அம்முனிவனை வணங்கினன் ]



என்று விச்வாமித்திரன் மிகவும் நயமாக நவில்கின்றனன். அமுதினும் இனிதென்று தம்மக்கள் சிறுகை அளாவிய அடிசி லின்பத்திற் கவாவியும், யாழினு மினிய அவர் மழலைச்சொல் கேட்பதற்கும், மற்று மறுமையில் நிரயந் தவிர்தற்கும் மக்களைப்பெறவேண்டிப் பெருந்தவம் முயல்வர் பிறர். மற்றுத் தயரதனோ

> படைப்புப்பல படைத்துப் பலரோ டுண்ணு
> முடைப்பெருஞ் செல்வ ராயினு மிடைப்படக்
> குறுகுறு நடந்து சிறுகை நீட்டி
> யிட்டுந் தொட்டுங் கவ்வியுந் துழந்து
> நெய்யுடை யடிசின் மெய்பட விதிர்த்து
> மயக்குறு மக்களை யில்லோர்க்குப்
> பயக்குறை யில்லைத்தாம் வாழு நாளே

[அடையக் கூடியவைகளையெல்லாம் அடைந்து தாமும் தமரும் விருந்தினருமாய்க் கூடி உண்ணும் உடைமை மிக்க செல்வத்தையுடையவராயினும், அவர்களுக்கிடையே குறுகுறுவென நடந்துவந்து தமது சிறிய கைகளை நீட்டிக் கலத்தி லிருப்பதைத் தரையிற் போட்டும் பிசைந்தும் வாயாற் கவ்வியும் அளைந்து நெய்யுடைய சோற்றை உடம்பில் உதிர்த்தும், மனத்தை இன்பத்தால் மயக்கும் மக்கள் இல்லாதவர்க்கு அவர்களது வாழ்நாளின் பயன் பூர்த்தியாகவில்லை]

என்று, இம்மையில் தனது இன்பம் நிறைவடையும் வண்ணம்,பாண்டியன் அறிவுடை நம்பியின் பாட்டின் வாய்மையை எண்ணியெண்ணி யேங்கின னல்லன். மக்கள் இல்லாததால் தன்வரையில் யாதொன்றுங் குறையில்லை யென்பதைத் தெற்றெனவோதி இப்பாண்டியனை மறுப்பான்போல் அவன், முன் வசிட்டனுடன் சொல்லிய காலையில்,

> அறுபதி னாயிர மாண்டு மாண்டுற
> உறுபகை யொடுக்கியிவ் வுலகை யோம்பினேன்
> பிறிதொரு குறையிலை யெற்பின் வையகம்
> மறுகுறு மென்பதோர் மறுக்க முண்டரோ

என, விளம்பிவிட்டனன். தாயொத்தஅன்பினால் என்பும் பிறர்க்குரியனா யமைந்தவள்ளல் தயரதசக்ரவர்த்தி தன்னின்பம் நினைத்துக் குறைப்பட மாட்டானாதலால் வான்மீகத்திற் சொன்னதுபோல் அவன் "புத்திரர்கள் இன்மையால் எனக்குச் சுகம் என்பது சிறிதேனும் இல்லை" என்று இந்நூலின்கண் கலுழ்ந்திலன். பின் எதற்குப் புத்திரன் வேண்டினனெனின்,

> அருந்தவ முனிவரு மந்த ணாளரும்
> வருந்துத லின்றியே வாழ்வின் வைகினர்
> இருந்துய ருழக்குவ ரெற்பி னென்பதோர்
> அருந்துயர் வருத்துமென் னகத்தை யென்றனன்.

தமிழ்நூல்களில் எத்தனையோஅரசர்கள் புத்திரனில்லாமல் வருந்தியிருக்கின்றனர். கம்பர் சூட்டிய மகுடத்தால் திகழ்கின்ற இம்மன்னனல்லால், தனக்குப்பின் பிறர் 'இருந்துயர் உழக்குவர்' என்னும் மறுக்கத்தால் புதல்வர்வேண்டிய வொரு வேந்தனை நினைத்துரைத்தல் அருமையா யிருக்கின்றது. தயரதன்தன் உளமுணர்ந்த கோசிகன், "என்னிற்பின் பார்காத்தற் குரியாரைப் பணிநீ" என்றே அவன் கலைக்கோட்டுமுனியை வேண்டியிருப்பான் எனத் தெரிந்து செப்பினன்.

இவ்விதம், கமலமலர்ந்த கருநீலக் குன்றுபோல் அவ்வவைக்கண் வீற்றிருந்த இராமனும் அவன் தம்பியர்மூவரும் கலைக்கோட்டு முனிவனைக்கொண்டு செய்வித்த வேள்வியின் பயனாய்ப் பிறந்து, வசிட்டன் மறை பயிற்றுவிக்க வளர்ந்த பெருமையை விச்வாமித்திரன் சனகனுக்கெடுத்தியம்பி, அதன்மேல் நிகழ்ந்தனவெல்லாம் ஐந்து பாசுரங்களுள் அடங்குமாறு செப்புகின்றனன்:—

> ஈங்கிவரா லென்வேள்விக் கிடையூறு
> கடிதியற்றும்
> தீங்குடைய கொடியோரைக் கொல்விக்குஞ்
> சிந்தையனாய்ப்
> பூங்கழலார்க் கொண்டுபோய் வனம்புக்கேன்
> புகாமுன்னம்
> தாங்கரிய பேராற்றல் தாடகையே
> தலைப்பட்டாள்

என்று தாடகையின் ஆற்றலை வற்புறுத்திப் பிறகு, இராமனது திறத்தை மிகுந்த ஊக்கத்தோடு

> அலையுருவக் கடலுருவத் தாண்டகைதன்
> னீண்டுயர்ந்த
> நிலையுருவப் புயவலியை நீயுருவ
> நோக்கையா
> உலையுருவக் கனலுமிழ்கட் டாடகைதன்
> னுரமுருவி
> மலையுருவி மரமுருவி மண்ணுருவிற்
> றொருவாளி

[இவன் எய்த ஒரு அம்பானது, கொல்லனுலையைப் போல் நெருப்பைச் சொரிகின்ற கண்களையுடைய தாடகையின் மார்பை உருவியும் (வேகம் அடங்காமல்) அப்பால் சென்று, மலைகளை உருவி மரங்களை உருவிப் பிறகு பூமியையும் உருவியது. எனின், ஐயா, ஜனகவேந்தனே, அலைகள் பாய்கின்ற கடலைப்போன்ற மேனியையுடைய இப் புருஷோத்தமனது நீண்டு உயர்ந்த பூமிபோன்ற உருவத்தையுடைய புயங்களின் வலிமையை நன்றாக உற்றுப்பார்]

எனக் காட்டிப் பேசுவான். பெண்ணெனநினைத்துத் தன் வடிக்கணை தொடுக்க மறுத்த இளவலைக்கொண்டு தாடகையைக் கொல்வித்த கோசிகன் அச்செயலைஇத்துணை ஊக்கத்துடன் புகழ்தல் இயற்கையே. "அரக்கியைக் கோறி" என்று கட்டளையிடும்வரையில் காத்திருந்துபிறகு 'இச்செயலின்பொறுப்பு நினதே" என்ற பான்மையில் "செய்க என்று நீ ஏவியதாற்றான், நான் இப்பாணத்தைத் துறக்கின்றேன்" என்று தாடகையைஇராமன் கொல்லலானதை விச்வாமித்திரன் மறந்திரானாகையால் அவன், "மைந்த, நானுடைய செயலொன்றும் நீ செய்ததில்லை. அவ்வகைத்தாயின் இவ்வரசசபையில் அதனை இயம்புவேனோ. இம் மன்னனும் மற்றிங்குளோரும் தாடகையைக் கொன்ற நின்னை எத்துணைப்புகழ்கின்றனர்,பார். ஆதலின் நீநெஞ்சத்திலொன்றும் நையவேண்டா" வென இராமனுக்குக் குறிப்புரைக்கும் நோக்கம் இக்கூற்றிற் காணலாகும். மற்று, அந்நோக்கம் எத்தாரம் பயன்பெற்றது என்பதொன்றே ஐயத்திற்கிடமானது. பேராற்றல் அரக்கியின் உரமுருவ விற்குனித்த அப்புயங்களை உற்று நோக்கிச் சனகன் வியந்தனனோ, அல்லது தாடகையெனும் தையலாள்படப் பொருத ஆண்மை மாசுற்றதெனச் சனகனதுகண்கள் அப்புயங்களைக்காணச் சிம்புளித்தனவோ, அறிதற் கியலவில்லை. ஒருகால் இச்

செயலில் வியப்பும் வெறுப்பு மின்றிச் சனகன் வாளாவிருந்திருப்பினும் இருக்கலாம். ஜனகனும், அவையிருந்த ஏனையோரும் இச்செயலை ஒவ்வி மகிழ்ந்தனராயினும் ஆகுக, மனத்துள் எள்ளி இகழ்ந்தனராயினும் ஆகுக. கோசிகனது ஏவலேனும் அநுமதியேனும் இன்றி இராமன் தாடகையைக் கொன்றிருக்க இயலாதென்பதை அவர் ஊகித் துணர்ந்திருப்பா ராதலின், வியந்து புகழ்வதாயின் இராமனது ஆற்றலைப் புகழ்ந்திருப்பர்; பழித்து இகழ்வதாயின் விச்வாமித்திரனது மதியையே இகழ்ந்திருப்பார்.

அன்னோர் மனநிலையும் முகக்குறியும் என்னவாயினும், இராமனோ அதனைச் சிறிதேனும் அறிந்துகொண்டிருக்கமாட்டான். ஏனெனில், இத்தாடகை வதத்தைக் கோசிகன் எடுத்துச்சொல்லத் துவக்கியதும் இராமன் தாங்கரிய நாணம்பூண்டு, தரையிலே தைத்தகண் வாங்காமல் தலைகவிழ்ந்து இருந்திருப்பான் என்று எண்ண நேர்கின்றது. கருநாயிறு போன்ற அவன்முகம் வெள்கிவெள்கி அன்று முழுவெண்மதியாய் விளர்த்திருக்கும். எவர் முகத்தையும் எடுத்து நோக்கக் கூசியிருப்பான். எனின் மற்றவர் மனக்கருத்தை அவர் முகக்குறியால் இராமன் அறிந்துகொள்வது எவ்வாறு இயலும்.

இன்னவாறிங்குப் புக்கச் சுழக்கியைச்செற்றசெய்தி சொன்னதுந் தனக்குத் தொலைப் பழிப்புடைப் பான்மைத்தென்றே மன்னவர் முதல்வனுய மனுவழி பிறந்த செம்மல் தன்னிலை தளர்ந்து நாணிச் சென்னியைச் சாய்த்த காட்சி, அன் றவ்வவைக்கண் கோசிகன் பேசிய மாற்றந்தன்னால் நிகழ்வுறக் காண்பதற்கு, ஆண்டுகள் பலபல இருபானைந்தளவு இனி நடந்த பின்னர், அரக்கனுமோ ரழிவுசெய்து நமதன்னையைக் கவர்ந்தகன் றிட்டநாளில் எய்திய தொன்றை நினைத்தல்வேண்டும்.

சானகியைத் தேடித்தேடிக் கானகம் திரிந்தலைந்த இளைப்பினால் உயங்கிய உணர்வோடு தாகமுமுற்றதன தண்ணலுக்கு நீர் கொணர்வான் சென்ற இலக்குமணன்பால் ஆசையின்வந்த அவ்வல்லரக்கி அயோமுகி என்பாளை அவ்விளவல் கொல்லாது நாசி மாத்திரங் கொய்தகற்றிய செயலைக் கண்ணுற்ற இராமன், தானுழ்ந்திருந்த அவ்வளப்பருந் துயரையுஞ் சிறிது மறந்து,

> தொல்லிரு டனைக்கொலத் தொடர்கின் ருளையுங்
> கொல்லலை நாசியைக் கொய்து போக்கினுய்
> வல்லைநீ மனுமுதல் மரபினே யெனப்
> புல்லின னுவகையிற் பொருமி விம்முவான்.

[மிகுந்த இருட்டில் உன்னைக் கொல்லக்கருதி தாத்திய வளையும் நீ கொல்லாது மூக்கு முதலிய உறுப்புகளைமாத்திரம் அறுத்து நீக்கினுய். ஆதலின் இலக்குமணு, இம்மனு குலத்திற் பிறப்பதற்கு நீதிநெறியறிந்த நீயே ஏற்றவனுகின்ருய், என்று, அவனைத் தழுவிக்கொண்டு உவகையால் உடலும் உள்ளமும் பூரித்தவனுன்]

என்ருல், தாடகையின்பால் தான் தகாததொன்றைச் செய்த தீமையோன் என்று அஞ்சியஞ்சி அகத்துள் அழுங்குவான் என்னுமவ் விரகசியத்தை எளிதில் உணரலாம். எனின், மன்னவையில் கோசிகன் உரைத்த மொழிக்கு இராமன் கூசி இளைத்தனன் என்பதே பொய்யில் நாடகக் காட்சிக்கு இயைந்த தோற்றமும் நிலையுமாகும். தாடகையைக் கொன்றது இராமனுக்கு உண்மையி லிழுக்குத்தானே வென்பதையாராய்ந்திறுதியிட்டிலம். விழுமியவொழுக்கமுடைய மேன்மக்கள் பழிபெரி தஞ்சுவாரென்பதே இங்கிவ் விராமன்பால் காணக்கிடக்கின்ற குணமாகும்.

இவ்வகையில் தாடகையைச் செற்றதோடு தன்னுடைய வேள்வியைக் காத்த திறத்தாலும் இராமனது கைவண்ணங் கூறியபின்னர்க் கோசிகன் அவனுக்குத் தான் படைக்கலங்க ளருளியதையுஞ் செப்பி

> கோதமன்றன் பன்னிக்கு முன்னையுருக்
> கொடுத்ததிவன் [கால்
> போதுநின்ற தெனப்பொலிந்த பொலன்கழற்
> பொடிகண்டாய்

என அவன் கால்வண்ணமும் உவகைமிகு பெருமிதத்தோடு காட்டுவானுகி

> காதலென்ற னுயிர்மேலு மிக்கரியோன்
> பாலுண்டால்
> ஈதிவன்றன் வரலாறும் புயவலியும்
> எனவுரைத்தான்.

நற்றவமுண்மையால் கோசிகற்கு இச்சிலையிராமன் குலநலமும் தோள்வலியுங் கூறுதற்கியன்ற செவ்வி வாய்த்தது. மகிழ்வி னுலதனை ஏற்று இனிதின் முடித்து வைத்தனன்.

# மலர்வனம்

### விதியுங் கதிபெற்றது

துறக்கமும் நிரயமும் மாந்தர் விதியின்வயத்தினுல் எய்துவர். மற்று அவ்விதிக்கேதானு மொரு துறக்க மளிப்பதற்கொத்த அதிகாரம் காதலார் கண்ணே உளதுபோலும். ஐயனுரிதனுர் பாடிய புறப்பொருள் வெண்பாமாலையில் வந்துள வொரு காதலன் தன் கருத்திற்கினிய கவினுளை மணந்ததால் வருத்தம் நீங்கிய மனத்துடனே,

> திங்கள் விளங்குந் திகழ்ந்திலங்கு பேரொளி
> யங்கண் விசும்பி னகத்துறைக—செங்கட்
> குயிலனைய தேமொழிக் கூரெயிற்றுச் செவ்வாய்ப்
> பயில்வளையை நல்கிய பால்.

[சிவந்த கண்ணினையுடைய குயிலின் இசைபோன்ற இனிய சொல்லினையும், கூரிய பற்களையும், சிவந்தவாயினையும், செறிந்த வளையல்களையுமுடைய இவளை எனக்குத் தந்த விதியானது, சந்திரன் இலங்கும் மிக்கு விளங்கும் பெரிய ஜோதியையுடைய அழகிய இடத்தினையுடைய சுவர்கத்திலே உறைவதாகட்டும்]

என விதியை வாழ்த்தி ஏத்துகின்ற நயமுடையயோ னுகின்றனன். அன்புடைய மனத்தினோர்கள் அளிக்காத தொன்றில்லை. ஏணிபோல் யாவரையும் மேலேற்றித் தானே வேருது தவித்திருந்த விதியும் இன்றைக்கு நற்கெதி பெற்றது. காதல் மிகுதியால் விதியை வாழ்திய செம்மலும் வாழ்க.

"மதுகரம்"




## Our Publications.

**Kamban's Kosala.**

By T. N Seshachalam: A succint exposition of the poetic Art and the sublime Political Philosophy of Kamban as can be gleaned out of the first four chapters of Balakandam. Dr. James H. Cousins has written a fqreword in terms of appreciation. Price Re. 1.

**Thoughts for Statesmen**

By T. N. Seshachalam. We who are making large strides towards democratic institutions may well pause and hear, what the great masters **Tocqueville** and **Montesquieu** have thought and said. Mr. S. Srinivasa Iyengar has introduced this book Price Rs. 1-8-0.

மேனுட்டுப் பேரறிஞர் நால்வர்.

கார்லைல், எமர்ஸன், ரஸ்கின், டால்ஸ்டாய் இவர்தம் கட்டுரைகள் சிலவற்றின் முதனூல் சுவை குறையா மொழிபெயர்ப்பு. விலை 0-8-0.

முப்பெரும் புலவர்.

கம்பர், காளிதாசர், ஷேக்ஸ்பியர் ஆகிய பெருங் கவிகள் ஜீவிய சரிதை. விலை அணு 4.

உலக அதியசம். விலை அணு 4.

விசித்திர விளக்கு.

எளிய தமிழ் நடையிலான அலாவுதீன் என்னும் அரபிக்கதை. விலை அணு 6.

வாழ்க்கைச் சரிதை. விலை அணு 4.

Sambandar (English) விலை ,, 4.

Vali (Do) விலை ,, 4.

**The Educational Publishing Co.,**
**Nungambakam, Madras.**



## அமிர்த குணபோதினி

இதுபோன்ற நவீன அற்புத சஞ்சிகை வாசிப்பவர் மனத்தைக் கவரத்தக்கதாய் இதுவரையில் தமிழில் வெளிவந்ததில்லை. ஜாதிமத வித்தியாசங்களின்றி யாவரையும் களிக்கச்செய்யும் வியாசங்கள் கொண்டது. பிரதி மாதமும் 56 பக்கங்களுடன் வெளிவரும்.

வருஷ சந்தா ரூபா 1. வெளிநாடு ரூ 1-4-0 மாதிரி காபி இனும்.

10-ம் பதிப்பு] [வந்து விட்டது

## ஆங்கில ஆசான்

எமது லேடி டிரேட்மார்க்கைப் பார்த்துவாங்குங்கள்.

60-நாட்களில் இங்கிலீஷ் கற்றுக்கொள்ளக் கூடிய விதமாய் அப்பியாசப் பாடங்களாக வகுத்து முன் பதிப்புக்களைவிட அதிக பக்கங்கள் சேர்த்துப் பெரிய எழுத்துக்களில் அச்சிட்டுள்ளோம். இதுவரையில் 53100 புத்தகங்கள் செலவாயிருப்பதாலேயே இதன் மேன்மை விளங்கும். இப்பத்தாம் பதிப்பு ஆங்கில ஆசான்போல் வேறு எந்தப் புத்தகங்களிலிருந்தும் அவ்வளவு சீக்கிரத்தில் இங்கிலீஷ் கற்றுக்கொள்ள முடியாது. நமது முன் பதிப்புப் புத்தகங்களை வைத்திருப்பவர்கள்கூட 10-ம் பதிப்பைப் பார்த்தால் இதிலும் ஒன்று கட்டாயம் வாங்கவேண்டுமென்று எண்ணுவார்கள். இதில் 1-அணு முதல் 3000-ரூபா வரையில் சம்பளம், வாடகைக் கணக்கு உளது. 800-பக்கங்களுக்கு மேல் கொண்ட அழகிய சீமைகலிகோ பைண்டு விலை ரூபா 2.

**தி. இராஜகோபால் முதலியார், 302,**
தங்கசாலைவீதி, மதராஸ்.



## கலா நிலயம்

1928 வருஷத்திய பிரதிகள் முழுவதும் பைண்ட் செய்தும் செய்யாமலும் எங்களிடம் கிடைக்கும்.

இதிலடங்கிய முக்கியமான கட்டுரைகள் தொடர்ச்சியாய் வந்தன:—சேக்கிழாரும்திருக்கண்ணப்பரும், கம்பராமாயணம், தமிழ்ப்பாடம், அகப்பொருள் வரலாறு, காந்திமதி யென்னும் செந்தமிழ் நாவல், தேவாரமும் ஐந்திணையும், கிரேக்க தத்துவ சாஸ்திரங்களின் விளக்கம், கார்லைல் ரஸ்கின் எமர்ஸன் முதலிய ஆங்கிலப் புலவர் கட்டுரைகளின் மொழி பெயர்ப்பு, இன்னும் பல விஷயங்கள் அவ்வப்போது வந்தவை எண்ணிறந்தன.

விலை:—தபால் சார்ஜ் உள்பட:—

பைண்டு செய்யாதது
உள் நாட்டிற்கு ரூ 8-0-0.
வெளி நாட்டிற்கு 9-8-0.

ஆப்லெதர் கில்டு பைண்டு,
உள் நாட்டிற்கு ரூ. 10-0-0.
வெளி நாட்டிற்கு ரூ. 12-8-0.

புல் காலிகோ கில்டு பைண்டு,
உள் நாட்டிற்கு ரூ. 9-8-0.
வெளி நாட்டிற்கு ரூ. 12-0-0.

வேண்டுவோர் முன்னதாகப் பணம் அனுப்பிக் கேட்கவும் **மானேஜர்,**
11, வேளாளர் தெரு, புரசைபாக்கம், சென்னை.



**கம்பராமாயணம், பாலகாண்டம்.**

புதியதோர் வகையினதான ஸ்ரீமான் T. N. சேஷாசலமையர் பதிப்பு. செய்யுள்களுக்குப் பதவுரை கூருது, பதம் பிரித்தும், தொகை விரித்தும், அன்வயப்படுத்தியும் படிப்பவர் தாமே முயன்று பொருள் தேடுமாறு ஆக்கப்பட்டுளது. கடினமான பதங்களுக்கு உரை சேர்க்கப்பட்டுள்ளது. விலை ரூ. 3-0-0. தபால் செலவு வேறு.

**ஏமாங்கதத்திளவரசன்.**

T. N. சேஷாசலம் ஐயர் இயற்றிய நூல். இலக்கிய நலங்கள் யாவும் துலங்குமோர் காதற்கதை. அன்பின் வன்மையும், வாய்மையின் தூய்மையும், புன்கவி புகுந்து செய்யும் துன்மதிச் சூழ்ச்சியும், வீரனொருவன் மண்மோகமும், இக்கதையை நிகழ்த்திவைக்கும் பெருமையைப் படிப்பவரே அறிவர். விலை ரூ. 1-0-0.

தபால் செலவு வேறு.

**கந்தபுராண வெண்பா.**

வெண்பாப் புலி என்ற புகழ்தாங்கிய ஸ்ரீ தி. சு. வேலுசாமிப்பிள்ளை அவர்கள் இயற்றிய நூல் இது. 6-காண்டங்களும், 5665 செய்யுள்களும் கொண்டது. ஓதுதற்கினிய நேரிசை வெண்பாக்களால் ஆயது. கற்ருேர் இதயம் களிக்கச் செய்ய வல்லது. விலை ரூ. 4-8-0.

தபால் செலவு வேறு.

**முருகன், ஓர் உழவன்.**

ஸ்ரீமான் K. S. வெங்கட்டரமணி M.A., B.L. ஆங்கிலத்தில் செய்த நூலின் தமிழ் மொழிபெயர்ப்பு. ஸ்ரீமதி கிருஷ்ணகுமாரி மொழி பெயர்ப்பாசிரியர். இக்கதையின் அமைப்பும், சொல்லும் வகையும், எளிய நடையும், படிப்பவர்க்குக் களிப்பைத் தரவல்லன. விலை ரூ. 1—8—0.

தபால் செலவு வேறு. **கலா நிலயம்,**
வேளாளர் தெரு, புரசைவாக்கம், சென்னை.

# உபயோகமுள்ள வெள்ளிக் கலன்களால் உங்கள் மனைகளை அலங்காரஞ் செய்யுங்கள்.

வெள்ளி நகைகளும் வெள்ளிப் பாத்திரங்களும் வெள்ளி நாணயங்களும் மாந்தர்தம் நல்வாழ்வின் வளர்ச்சியுடன் எக்காலத்திலும் சேர்ந்து வருகின்றன.

சுராஜ்மல் வெள்ளிக் கலன்கள் வெள்ளி வேலைக் கலையின் முதிர்ச்சியைக் காட்டி நிற்றலால் அவை நன்கொடை அளித்தற்கு உரியன. உலோகத்தின் மேன்மையும், வேலைப் பாட்டின் பெருமையும் அமைந்திருக்கும் சுராஜ்மல்லின் வெள்ளி எங்கும் ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. எவ்விடத்திற்கும் ஏற்றதா யிருக்கின்றது. நல்ல வெள்ளிச் சாமான்களை வைத்திருப்பதுபோல் திருப்தியுடையது வேறில்லை. நன்கொடைக்குஏற்றது

எங்களுடைய வெள்ளிக் கலன்களெல்லாம் சுத்தமான உலோகத்தால் செய்தவை. அவைகளின்மீது எங்கள் டையமண்ட் டிரேட் மார்க் இருக்கும். தேர்ச்சிபெற்ற வேலைக்காரர்களின் கைவேலை அவை. ஒவ்வொன்றும் அழகின் அதிசயம். தனக்குநிகர் தானே என்னும்படி அமைந்திருக்கின்றது.

கணக்கற்ற சாமான்களைச் செய்து தயாராக வைத்திருக்கிறோம். ஆதலால் வீட்டின் உபயோகத்திற்கேனும் வெகுமதி கொடுப்பதற்கேனும் உங்களுக்கு வேண்டியதை எளிதில் தேர்ந்தெடுத்துக் கொள்ளக்கூடும்.

வேண்டுவோர்க்கு மாதிரிகளும் விலைகளும் அனுப்புவோம்.

## ஸுராஜ்மல் லல்லுபாய் & கோ.,

வைர வியாபாரிகள், நகைகட்டுவோர், பொன் வெள்ளிக் கலன்கள் செய்பவர்.

**135**, பெரிய பஜார் திரிச்சிராப்பள்ளி. 359, கலபாதேவி ரோட், பம்பாய். **134**, மோகல் தெரு, ரங்கூன். 12, லால்பஜார் கல்கத்தா. **313**, எஸ்பளனேட், சென்னை.

## SURAJMAL LALLUBHAI & CO.,

DIAMOND MERCHANTS AND JEWELLERS,
GOLD AND SILVER SMITHS.

135, Big Bazaar, TRICHY. 359, Kalladvi Road BOMBAY. 134, Mogul Street, RANGOON. 12, Lal Bazaar CALCUTTA. 313, Esplanade, MADRAS.




# வர்த்தமானம்

சென்னைச் சைமன் கமிட்டியார் இந்த மாதம் முப்பதாம் தேதியன்று கூட விருக்கிறார்கள். அவர்களுடைய அறிக்கை மேமாதம் முடிவதற்குள் தயார் செய்வார்களென்று தெரிகிறது.

***

ஆப்கன் யுத்தம்:-அமீர் அமனுல்லாவுக்கு உபபலம் கூடிக்கொண்டுவருகிறது. நாதர்கான் தான் ஆப்கானிஸ்தானத்தை மீட்க விருக்கிறதாக அறிக்கை செய்து படைகளையும் சேர்த்துக் காபூல் நகரத்தை நோக்கிச் சென்றுகொண்டிருக்கிறான்.

***

முதல் இந்திய ஆகாயக்கப்பல் ஞாயிற்றுக்கிழமை லண்டனுக்குப்போய்ச் சேர்ந்தது. இதில் 5 பிரயாணிகளும் 500-பவுன் தபால்களும் போயின.

***

இந்தியாவுக்கும் லண்டனுக்கு மிடையில் ஓட ஆரம்பித்திருக்கும் ஆகாயக் கப்பலில் இரண்டாவது கப்பல் கராச்சியில் சென்ற சனிக்கிழமை மூன்று மணியளவில் வந்து சேர்ந்தது. மூன்றாவது கப்பல் சனிக்கிழமை லண்டனிலிருந்து புறப்பட்டிருக்கிறது.

***

சைமன் கமிஷன் இங்கிலாந்துக்குப் பிரயாணமாய் விட்டது. இந்தியாவில் கமிஷன் செய்யவந்த காரியங்கள் முடிவாய்விட்டன. இனிமேல் அவர்களுடைய அறிக்கை இங்கிலாந்தில் தயார் செய்வார்கள். இது அவ்விடம் நடக்கவிருக்கும் பார்லிமெண்டு தேர்தல் முடிவான பின்தான் செய்வார்கள்.

***

கனம் ஸ்ரீநிவாச சாஸ்திரி P. C. அண்ணாமலைச் சர்வகலாசாலைக்கு உபைத்தலைவராக ஏற்பட்டிருக்கிறார் என்று தெரிகிறது.

***

பொது பந்தோபஸ்து மசோதா, சட்டசபையில் நிறைவேறாது போன காரணத்தினால் இராசப்பிரதிநிதி அவருக்குள்ள அதிகாரத்தை உபயோகப்படுத்தி ஒரு அவசரச்சட்டம் உண்டாக்கி யிருக்கிறார். இது சட்டசபையில் கொண்டுவரப்பட்ட மசோதாவில் அடங்கியுள்ள விதிகளையே சட்டமாகக் கொண்டிருக்கின்றது.

***

கோ. லெட்சுமிபுரம்:—ஸ்ரீ மீனாட்சி சங்கத்து நான்காவதாண்டு முதலாவது திங்கள் கூட்டம் 10-4-29 மாலை 4-மணிக்குக் கானாடுகாத்தான் திருவாளர் சா. ராம. சித. ஐம்புலிங்கம் செட்டியாரவர்கள் அக்ராசனத்தில் நடைபெற்றது. தூத்துக்குடி திருவாளர் G. C. T. பாண்டியன் B. A. அவர்களும் கொத்தமங்கலம் இராம சுப்ரமணியன் அவர்களும் சொ. வி. மாணவர் மாணவிகளும், சிறந்தஉபந்நியாசங்கள்புரிந்தனர். இச்சங்கத்தில் கனம் ராஜா, சர் M. A. அண்ணாமலைச் செட்டியாரவர்களுக்குப் "பரம்பரை ராஜா" எனும் பட்டம் வந்தமைக்கும், ஆ. தெக்கூர் சுப. அருணகிரி அவர்கள் மணம் குறித்தும் பாராட்டுதல் தீர்மானம், திரு. ந. சொ. அருணாசலன் அவர்களாலும் திரு. மு. சி விச்வநாதச் செட்டியாரவர்களாலும் முறையே கொண்டுவரப்பட்டு ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. பின்னர், தலைவர் இனிய முடிவுரையுடன் காரியதரிசிக்கு வந்தனம் கூற இனிது முடிவுபெற்றது, எனக் காரியதரிசி அறிவிக்கின்றார்.

இந்தியா சட்டசபையில் பொதுபந்தோபஸ்து மசோதாவைப்பற்றிக் கனம் படேலின்தீர்ப்பு:-சென்ற வாரம் இதைப்பற்றிய தீர்ப்பு சட்டசபையில் சபைத்தலைவரால் கொடுக்கப்பட்டது. அரசாங்கத்தார் இந்த மசோதாவை எவ்விதத்திலும் சட்டசபையில் நிறைவேற்ற வேண்டியது அவசியமென்றும் அவ்விதம் நிறைவேற்றுவதற்கு ஒருவகையான தடையும் இல்லை என்றும் எடுத்துக்காட்டிய பல நியாயங்களையும் கண்டித்து, இந்த மசோதா ஒழுங்கான வாதத்திற்குக் கொண்டுவரப்படவில்லை யென்றும் அவ்விதம் முறை தப்பிக்கொண்டு வரப்பட்டிருக்கிறதா அல்லவா வென்பதைப்பற்றித் தீர்ப்புச்சொல்வது சபைத்தலைவருக்கே உரிய அதிகாரமும் கடமையும் என்றும், சபையாரே இதைப்பற்றிய தீர்ப்பைச் சொல்லவேண்டுமென்று அரசாங்கத்தார் சொல்வது சரியல்லவென்றும் சொன்னார். பின் என்ன காரணங்களுக்காக இந்த மசோதா சட்டசபையில் வாதிக்கப்படுகிற தென்பதற்கு வேண்டிய நியாயங்களைச் சொல்லி இந்த மசோதாவைச் சட்டசபையில் நிறைவேற்ற எத்தனிப்பது ஒழுங்கு விரோதம். என்று தடைசெய்து விட்டார். கடைசியில் அவர் சொன்னதாவது "பிரேரணை ஒழுங்கு விரோதமானதென்று கூறுவதற்கான அதிகாரம் எந்த விதியிலாவது நிரந்தர விதியிலாவது நேராகக் கூறப்படா விட்டாலும் யூகத்தாலும் உதாரணத்தாலும் அது இருப்பதாகவே ஏற்படுகின்றது. இந்தப் பிரேரணையைப்போல் சபையின் நடவடிக்கை முறைக்கு விரோதமாகவுள்ள பிரேரணையை ஒழுங்கு விரோதமென்றுகூறத் தலைவருக்கு இயற்கையாக அதிகாரமிருப்பதாக நான் கொள்ளுகின்றேன்; ஆகையால் இந்தப்பிரேரணை ஒழுங்கு விரோதமானதென்று கூறுகின்றேன்.

***

இராசப் பிரதிநிதியின் கூற்று:—சென்ற வெள்ளிக்கிழமை இந்தியா சட்டசபையும் இராஜாங்க சபையும் ஒன்றுசேர்ந்த கூட்டத்தில் இராசப்பிரதிநிதி வெடிகுண்டு எறிந்த அதிக்கிரமத்தைப்பற்றிப் பேசி "இதுபோன்ற பலாத்காரச் செயல்களை இவற்றிற்குத் தூண்டுதலளித்த விஷயங்களிலிருந்தும் இவற்றின் அடிப்படையான எண்ணங்களிலிருந்தும் பிரிக்க முடியாது. சிலர் முதலில் யோசித்துப் பேசியும் இருக்கின்றனர். அதன்பிறகே மற்றவர்கள் இறுதியான கொடுஞ் செயல்களில் இறங்குகின்றனர்.................இதற்குச் சுயநலத்தியாகம் என்ற பொய்யான புதினத்தன்மை ஏற்படும்படியும் செய்கின்றது.

"சென்ற திங்கட்கிழமை நேர்ந்ததைப்போன்ற சம்பவம், இந்தியாவின் உண்மையான நண்பர்கள் விரும்பும் இந்திய ஸ்தாபனங்களின் அமைதியான முன்னேற்றத்தைத் துரிதப்படுத்த முடியாது. முன்னேற்றத்தை அது தடை செய்யும்படியும் விடக்கூடாது..........................................

"இந்தியச் சட்டசபைத் தலைவர் நேற்றுக்கொடுத்த தீர்ப்பின்பலனாக இருவித நிலைகள் ஏற்பட்டிருக்கின்றன. முதலாவது, விதிகளைத் தயாரித்தவர்கள் உத்தேசிக்காத அர்த்தம் அதற்குக் கற்பிக்கப்பட்டிருக்கிறதென்று நான் கருதுகிறேன். அந்தத் தீர்ப்பின் பலனைப்பற்றி நான் விவாதிக்காதபோதிலும் அது கவர்ன்மெண்டு அவசியத்திற்குத் தகுந்த அதிகாரங்களை கேட்க முடியாமல் செய்வதோடு, சட்டசபைகளும் எதைப்பற்றியும் விதிவரம்புக்குள் யோசித்து ஒருவித முடிவுக்கு வரமுடியாமல் அது செய்யக்கூடியதாக விருக்கிறது"

KALANILAYAM.
REG. NO. M, 2324.


இதன் விலை ரூ. 2-0-0

# இன்பவாழ்க்கையின் இரகசியங்கள்

தபால் சார்ஜ் பிரத்தியேகம்.

அழகிய சீமை கலிகோ பைண்டு செய்யப்பட்டது. கண்ணைக் கவரத்தக்க அனேக ஆப்டோன் படங்களுடனும், லயன் பிளாக்குகளுடனும் 400 பக்கங்களுக்குமேல் அழகிய பெதர்வெயிட் பேப்பரில் சுத்தமான எழுத்தில் அச்சிடப்பட்டுள்ளது

உலகத்தில் ஆண்மக்களும், பெண்மக்களும் ஒரேவிதமான அன்புடையவர்களாய் ஒருவர்மீதொருவர் உண்மைக்காதல்கொண்டு ஒருவரையொருவர் மணந்து கூடிக் களிப்புற்று, நற்சந்ததிகளைப்பெற்று, இல்லற நீதிகளை வழுவாமற்செய்து வாழ்ந்துவருவதே இன்பவாழ்க்கையாம்; இத்தகைய வாழ்வை அடைதற்குரிய மார்க்கங்களை உணர்ந்துகொள்வதற்கேதுவாக நம்முன்னோர்கள் அகப்பொருள் நூல்களை, வெளியிட்டிருக்கின்றனர்.

இதில் நமது பூர்வீகச் சாஸ்திரங்களின் சாராம்சங்களும், அகப்பொருள் நூல்களின் கருத்துக்களும் வேறு பாஷைகளிலுள்ள இன்பரச நூல்களின் கொள்கைகளும் இன்பவாழ்க்கையின் இரகசிய முறைகளும், இன்னும் இல்வாழ்க்கைக்கு இன்றியமையாதனவாகிய அனேக விஷயங்களும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இதனை ஒவ்வொரு குடும்பத்தினரும் வாங்கி வாசிக்கலாம்.

**ஆரியன் புக் டிபோ,** நெ. 19, தாண்டவராயமுதலி தெரு, திருவல்லிக்கேணி, மதராஸ்.

---

வெளி வந்துவிட்டது ! வெளி வந்துவிட்டது !

## "ஆனந்தபோதினி" வாரப்பத்திரிகை.

தமிழ் மக்கள் நீண்ட நாட்களாக எதிர்பார்த்துக் கொண்டிருந்த "ஆனந்தபோதினி" வாரப்பத்திரிகை வெளி வந்து விட்டது. மத ஆராய்ச்சி தமிழ் மொழி வளர்ச்சி, அரசியல் அறிவு, நவீனமுறையில் விவசாயம், வியாபாரம், கைத்தொழில் முயற்சிக்கான அறிவு வளர்ச்சி சுகாதார அபிவிருத்தி, கிராம முன்னேற்றம், விஞ்ஞான வளர்ச்சி, பெண்கள் முன்னேற்றம், மாணவர் அறிவைப் பெருக்கல், தேச விடுதலைக்காகப் பிரசாரம் செய்தல் முதலிய விஷயங்களோடு விநோத விஷயங்களும் வேடிக்கைப் படங்களும், கற்பனைச் சிறு கதைகளும் படிப்போர் உள்ளங்களைக் கொள்ளைகொள்ளும் முறையில் வெளி வருகின்றன. இன்றே சந்தாதாரராகச் சேருங்கள்.

சந்தா விபரம்:—உள்நாடு வருட சந்தா ரூ. 3. ஆறு மாத சந்தா ரூ. 1-12. வெளிநாடு வருட சந்தா ரூ. 4.
(வெளி நாடுகட்கு 6 மாத சந்தா இல்லை)

**ஆனந்தபோதினி ஆபீஸ், மதராஸ்.**



A MOMENTOUS BOOK

# ANCIENT JAFFNA

BY

**Mudaliar C. RASANAYAGAM, C. C. S.**

WITH AN APPRECIATIVE FOREWORD

BY

**Professor S. KRISHNASWAMI AIYANGAR, M. A.**

An authentic History of North Ceylon, particularly of Jaffna, based on archeological Epigraphic and Linguistic researches is stated here for the first time in a connected logical manner from ancient times up to the occupation of the island by the Europeans. The progress of civilisation in Ceylon and Southern India and incidentaly in other countries associated with them as brought out here reads like a romance without infringing on the cannons of Historic Research. The Honest patriotism of the author is inspiring without misleading.

Every student of History would read this book with pleasure and profit.

**Price Rs. 5-8-0. (V.P. Charges extra)**

*MANAGER:—*
**"KALANILAYAM"**
*11, VELLALA STREET,*
**Purasawalkam, MADRAS.**


Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E Kumariah, B.A., B.L. (Editor)